


www.tamilarangam.net





# எழுச்சி

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (TELO) உத்தியோகபூர்வமான ஏடு.



## அராஜகத்திற்கு எதிராக மக்கள் அணி தலைவருக்கு மக்கள் கண்ணீர் அஞ்சலி

ஒடுக்குமுறையாளர்களுக்கு எதிராக போராடிய ஒரே காரணத்திற்காக தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் (L.T.T.E) இயக்கத்தினரால் கோரமாக படுகொலை செய்யப்பட்ட தலைவர்: **சிறீ சபாரத்தினத்திற்கும்** – போராளி களுக்கும் – பொதுமக்களுக்கும் அஞ்சலி தெரிவித்தும் எதிர்ப்புரட்சி யாளர்களான L.T.T.E யினருக்கு எதிர்ப்பு தெரிவித்தும் தமிழ் ஈழ மக்கள் கடந்த மே 9-ம் திகதியை பூரண ஹர்த்தாலாக அனுஷ்டித்தனர்.

– *தொடர்ச்சி 03-ம் பக்கம் பார்க்க.*



குரல் : 9 1986
ஜூலை - ஆகஸ்டு ரூ-2/=

**டெலோவின் புரட்சிகர மக்கள் எழுச்சிக் குரல்**



# விடுதலைக் குரல்

வருடத்திற்கு வருடம் வரும் கோவில் திருவிழாக்களைப் போல, UNP அரசாங்கம் வருடா வருடம் குட்டையை குழப்பி, உலக நாடுகளிடம் இருந்து உதவி பெற்று, தமது இராணுவத்தை ஆயுத ரீதியாகவும் அமைப்பு ரீதியாகவும் பலப்படுத்த தவறுவதில்லை.

1984ம் ஆண்டு நடைபெற்ற வட்டமேசை மாநாடு-1985-ம் ஆண்டு நடைபெற்ற போர் நிறுத்தம் ஆகியவை இவ்வாறனதே. இதே வரிசையில் இவ்வாண்டு [1986] சர்வகட்சி மாநாட்டை கூட்டுகிறார்.

கடந்த ஆண்டுகள போல இவ் வருடமும் இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகளின் கூட்டம் பாரிசில் நடைபெறுகின்ற சமயம் தான் இம்மாநாட்டை அவசர அவசரமாக கூட்டுகிறார்.

இலங்கையின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகித்த தேயிலை ஏற்றுமதி பெருத்த வீழ்ச்சி அடைந்துள்ளது.

வெளிநாட்டுச் செலவாணியின் பெரும் பகுதியை ஈட்டித் தந்த சுற்றுலாத் துறையும் படுத்து விட்டது.

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான யுத்த செலவீனம் அரச கஜானாவை அடியோடு காலியாகிவிட்டது.

பெருத்த பொருளாதார நெருக்கடியில் மாட்டிக் கொண்ட அமெரிக்காவும் தனது உதவியைகுறைக்கப் போவதாக கூறிவிட்டது

''சொல்வது ஒன்று; செய்வது ஒன்று'' என ஜெயவர்த்தன பற்ற சிறிலங்காவில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் கூறி வருகிறார்கள்.

''ஜெயவர்த்தன ஒரு பொய்யர்'' என மேற்கத்தைய பத்திரிகைகள் வர்ணிக்கின்றன,

இந்த நிலையில்—

''இலங்கை இனப்பிரச்சனை சம்பந்தமான பேச்சுக்களில் முன்னேற்றம் இல்லாவிடில் கடன் வழங்குவதில் சிறிலங்காவுக்கு சலுகை காட்ட முடியாது. இதுவே சிறிலங்காவுக்கு கடைசி சந்தர்ப்பம்'' என மேற்கு நாட்டு ராஜதந்திரிகள் கூறிவந்தனர்.

இவற்றையெல்லாம் கணக்குப் பார்த்த நிதியமைச்சர்றொனி-டி-மெல் ''சென்ற வரும் உதவி அளிக்கும் நாடுகளில் இருந்து 500 மில். டொலர் கடன் கிடைத்தது. இவ் வருடம் அத்தொகை பெருமளவு குறைந்துவிடும்'' என அழுது கொண்டிருந்தார்.

இவற்றையடுத்ததே, இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணப் போவதாக ஜெயவர்த்தன அரசாங்கம் போலி நாடகம் ஆடத் தொடங்கியது.

அதுவும், இந்தியாவுக்கு எதிராக செயல்பட்டும்-வடக்கு பகுதியில் மீன் பிடிக்க தடை விதித்தும் ஏகாதிபத்திய எஜமானர்களை திருப்திப்படுத்தியது.

அதாவது, இனப்பிரச்சனைக்கு தீர்வு காண இந்தியா எடுத்துள்ள முயற்சிகளை முறியடிக்கும் விதத்தில் கொழும்பில் சர்வகட்சி மாநாட்டை நடத்துவதென தீர்மானித்தது. இது தவிர, எதிர்க் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து நாடுமுழுவதும் தீவிரவாத எதிர்ப்பு பிரச்சாரங்களை நடத்துவதெனவும்,இவ்விடயத்தில் எதிர் கட்சிகளுடன் கூட்டரசாங்கம் அமைப்பதெனவும் UNP அமைச்சரவை இரகசியமாக தீர்மானித்தது.

எனவே, தற்போது கூட்டப்பட்டுள்ள சர்வகட்சி மாநாட்டின் ஒரே நோக்கம் சிதைந்துள்ள சிறிலங்கா பொருளாதாரத்தை சீர் செய்ய நிதி உதவி கூட்டமைப்பு நாடுகளிடம் இருந்து நிதியுதவி பெறுவதும்; இந்தியாவின் சமரச முயற்சிகளை ஓரங்கட்டுவதுமாகும்.

சர்வகட்சி மாநாடு நடத்தப்படும் என UNP அரசாங்கம் அறிவித்து முடிந்த கையோடு நிதியமைச்சர் றொனி-டி-மெல் உதவி கேட்பதற்கான முகாந்தரத்தை தொடங்குவதற்கு பாரிஸ் பறந்தார்; தேசிய பாதுகாப்பு அமைச்லலித் இரவோடு, இரவாக அமெரிக்கா பறந்தார்; ஜெயவர்த்தன இந்தியாவிற்கு எதிரான பிரச்சாரங்களை பொதுக் கூட்டங்களில் நடத்தி வந்தார்,

இவற்றையடுத்து.

அமெரிக்கா இலங்கை தேயிலையை கொள்வனவு செய்வதாக அறிவித்தது.

300, 175 படைகளைக் கொண்ட முறையே ''டேவிட் சூரு''—''கொபாய் ஜபார்'' என்ற இரண்டு விமானம் தாங்கிக் கப்பல்களை அமெரிக்கா கொழும்பு துறைமுகத்திற்கு ஆயுதங்களுடன் அனுப்பி வைத்தது.

நிதி வழங்கும் ஏகாதிபத்திய நாடுகள் 700 மில். டொலரை உதவியாக இலங்கைக்கு வழங்குவதாக அறிவித்தன.

ஜெயவர்த்தன தனது குறிக்கோளை அடைந்துவிட்டார். ஆதலால் அடுத்ததாக, தமிழ் பேசும் மக்கள் மீது இராணுவ வன்முறைகளை கட்டவிழ்த்துவிடுவார். சர்வகட்சி மாநாட்டை குழப்பிக் கொண்டுவார்.

ஆதலால், இனப்பிரச்சனையில் ஜெயவர்த்தனவின் நிலைப்பாட்டை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும். கடந்த காலங்களில் ஜெயவர்த்தனவின் இராணுவ வன்முறையை, தமிழ் மக்களின் அவல நிலையை ஐக்கிய நாடுகள் சபையில் ஒலிக்கச் செய்து ஜெயவர்த்தனவின் போலிப் பிரச்சாரங்களை முறியடித்ததுபோன்று தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு தன்னலியன்ற பங்களிப்பை வழங்க வேண்டும்,

# நிற்காதுன் நெடும்பயணம்

தேரும் தமிழ் நிலத்தில்
தெருவெங்கும் பவனிவரும்
நீ வருவாய் நாயகனாய்

நெடிதுயர்ந்து நிழலளிக்கும் நீள் தருக்கள்
மாவாழை, தோரணங்கள் வாழ்த்துப்பாடும்
வாகையுடன் நீ வருவாய் நாயகனாய்

பனீர்ப் புஷ்பங்கள்
படைதரிக்கும் மறவர்கள்
புடைசூழ நீ வருவாய் நாயகனாய்
என்று
வழியோடு விழிவைத்து பார்த்திருந்தோம்...


பாவிகளோ !
சல்லடையாய் துளையிட்டுன்
,சடலமதை தீயிட்டு
கொல்லையிலே போட்டிட்டார்

நிற்காது
நிற்காதுன் நெடும்பயணம்

நெடுமலைகள் தகரும்
உன் நினைவலைகள் தொடரும்
தமிழ் ஈழம் மலரும்.



—டெலோ
கனடா கிளை.



www.tamilarangam.net

## முதல் பக்கத் தொடர்ச்சி....

இக் ஹர்த்தாலை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) தலைமை ஏற்று நடாத்தியது.

மே. 9ல் தமிழீழப் பகுதியின் கடைகள், பாடசாலைகள், அலுவலகங்கள் மூடப்பட்டிருந்தன. வாகனங்கள் ஓடவில்லை. வீடுகள் தோறும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. அத்துடன் வாழை மரங்களும் தோரணங்களும் கட்டப்பட்டு வீதிவீதியாக தலைவர் சிறீ சபாரத்தினத்தின் புகைப்படங்கள் வைக்கப்பட்டு, மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டிருந்தன. நகரெங்கும் தலைவர் சிறீ சபாரத்தினத்தின் படங்களும் ENLF தலைவர்களுடன் உள்ள படங்களும் ஒட்டப்பட்டிருந்தன.

படுகொலைகளை கண்டித்து மக்கள் திரண்டெழுந்து ஊர்வலங்களை நடாத்தினர்.




ஊர்வலத்தில் தலைவர் சிறீ சபாரத்தினத்தின் பெரிய அளவிலான உருவப்படம் எடுத்துச் செல்லப்பட்டது. பிரேதப் பெட்டி ஒன்றையும் மக்கள் தூக்கிச் சென்றனர். ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்களின் கைகளில் ''சுதந்திரத்திற்காக போராடி சுதந்திரம் மறுக்கப்பட்ட மனிதனின் மரண ஊர்வலம்'' என்றும், வேறு கோஷங்களும் கொண்ட சுலோக அட்டைகளும் காணப்பட்டன, ஊர்வலத்தின் நீளம் ஏறத்தாழ 7 மைல்களாகும்.




### ஹர்த்தால் பற்றி U.N.I. நிருபர் கூறியதாவது

மே 9ம் திகதி தமிழீழத்தின் கடைகள், பாடசாலைகள், அலுவலகங்கள மூடப்பட்டிருந்தன. சிறீ சபா புகைப்படங்கள் வீதியெங்கும் ஒட்டப்பட்டிருந்தன, LTTE யினரை கண்டித்தும் நாடெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

ஆனால் LTTEயினர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர் தங்கள் உத்தரவை மீறி மக்கள் ஆதரவு தந்தால் இராணுவத்திடமிருந்து உங்களை காப்பாற்ற நாங்கள் வரமாட்டோம், என்று LTTE யினர் எச்சரித்து மிரட்டினர். நல்லூரில் மௌன ஊர்வலம் நடத்த வந்த பெண்கள் மீது LTTE யினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். ஆனால் LTTEயினரின் எச்சரிக்கையை மீறி மக்கள் முழு ஆதரவு அளித்தனர். வீதிவீதியாக மௌன ஊர்வலங்களை நடாத்தினர். இவ்வாறு தமிழ் ஈழம் சென்று வந்த UNI நிருபர் தெரிவித்தார்.

www.tamilarangam.net

# LTTE-ன் அராஜகம் தொடர்கிறது. EPRLF-போராளிகள் மீது தாக்குதல்

தமிழ் ஈழ மக்களின் உண்மையான விடுதலையையும்-இந்து மகா சமுத்திர பிராந்தியத்தின் அமைதியையும், பாதுகாப்பையும் கருத்திற் கொண்டு இந்தியா மற்றும் சர்வதேச முற்போக்கு சக்திகளின் ஆதரவுடன் போராடும் தமிழ் ஈழ விடுதலை இயக்கங்களை பல வீனப்படுத்த ஏகாதிபத்திய பிற்போக்கு சக்திகளால் விலைக்கு வாங்கப்பட்ட LTTE அமைப்பு தொடர்ந்து முயன்று வருகிறது.

எதிர்ப் புரட்சிக்காகவே உருவாக்கப்பட்ட LTTE அமைப்பு போராளிகளையும் அதன் தலைவர்களையும் காலாகாலமாக அழித்தொழித்து வருவதை தமிழ் ஈழ மக்கள் அறிவார்கள். சிறிலங்கா ஒடுக்குமுறையாளர்களைவிட பன்மடங்கு அராஜகத்தில் இறங்கிய LTTE யினர் டெலோ தலைவர் சிறி சபாரத்தினத்தையும் - நூற்றுக்கு மேற்பட்ட போராளிகளையும் கொன்று குவித்து தமிழ் பேசும் மக்களுக்கே பெருத்த அவமானத்தை ஏற்படுத்தினர்.

அடுத்ததாக தமது நடவடிக்கையை எமது தோழமை அமைப்பான EPRLF மீது மேற்கொண்டு வருகிறார்கள். ஏற்கனவே EPRLF போராளிகளான றேகன்-அமீன்-பிரதாப்-ஆகிய போராளிகளை LTTE யினர் படுகொலை செய்ததோடு; EPRLF தலைவர் பத்மநாபாவையும், பல மூத்த உறுப்பினர்களையும் கொலை செய்ய முயன்றனர்.

தொடர்ந்துகடந்த 11-6-1986ல் யாழ் கச்சேரிக்கு அருகாமையால் வீதியால் நடந்து சென்ற EPRLF போராளிகளான ஈழமணி, ரமேஸ் ஆகியோரை கொலைசெய்ய முயன்றனர். 14-6-1986ல் இன்னொரு EPRLF போராளியான பவான் என்பவரை அவரது வீட்டில் வைத்து கொலை செய்ய முயன்றனர். இவர்கள் அனைவரும் பலத்த காயங்களுடன் உயிர் தப்பினார்கள். 15-6-1986ல் மற்றோர் EPRLF போராளி ஒருவரைகடத்தி சித்திரவதை செய்ததோடு, ரோய் என்ற EPRLF போராளியையும் கடத்த முயன்றனர்.

எனவேஎம்மக்களின்விடுதலையை நிதர்சனமாக்க பிற்போக்கு LTTE அமைப்பினரை தனிமைப்படுத்த வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. எமது மக்களின் விடுதலையில் ஆர்வம் கொண்டுள்ள அனைத்து சக்திகளும் இவ்விடயத் தெளிவாகவும், உறுதியாகவும் செயல்பட்டு தமிழ் ஈழ விடுதலையை நிதர்சனமாக்க போராடும் புரட்சிகர அமைப்புகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

# தமிழ் நாட்டில் LTTE போலிப் பிரச்சாரம்

தமிழ் பேசும் மக்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதலை தொடுத்து வந்த சிறீ லங்கா ஆயுதப் படைகளுக்கு எதிராக பலமான தாக்குதலை தொடுத்து, அவர்களை வடபகுதி இராணுவ முகாம்களுக்குள்ளே முடக்கியதோடு, அக் கொலைகாரர்கள் வெளியே தலை காட்டும் போது முன்னின்று தாக்குதலை நடாத்தி முகாம்களுக்குள்ளேயே திருப்பி அனுப்பும் டெலோ மீது LTTE யினர் நயவஞ்சகமான தாக்குதலை தொடுத்தனதயடுத்து, தமிழ் ஈழப் பகுதிகளில் அரச இராணுவம் தனது பலத்தை பன்மடங்கு பெருக்கியுள்ளது.

தமிழ் ஈழப் பகுதிகளில் இராணுவத்தினர் அச்சமின்றி நடமாடி எமது மக்களுக்கு தொல்லை கொடுப்பதோடு, புதிய இராணுவ முகாம்களையும் அமைத்துள்ளனர்.

இத்தகைய நிலைக்கு முழுப் பொறுப்பாளர்கள் LTTE யினரே.

யாழ்ப்பாண பகுதிகளில் மட்டும் 05 புதிய இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனையிறவு முகாமிலிருந்து இராணுவம் முன்னேறி கட்டைக்காடு-பளை ஆகிய இடங்களில் புதிய முகாம்களை அமைத்துள்ளது பலாலி முகாமிலிருந்து இராணுவம் முன்னேறி வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் புதிய முகாமை அமைத்துள்ளது கோட்டை முகாமிலிருந்து முன்னேறிய இராணுவம் மண்டைதீவிலும், ஊர்காவற்றுறையிலும புதிய முகாம்களை அமைத்துள்ளது இத்தோடு, வவுனியா-ஹொறப்பத்தானை வீதி 2ம் கட்டையில் சிறிய முகாம் அமைக்கப்படுகிறது.

இவைதவிர, மேலும் இரண்டு புதிய இராணுவ முகாம்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது வசாவிளானில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி 02 மைல் தொலைவில் ஒரு முகாமும், பூநகரிக்கு அருகாமையில் உள்ள பண்முனையில் மற்றொரு முகாமும் அமைக்க முன்னேற்பாடுகள் நடை பெறுகின்றன. மற்றும் பலாலி இராணுவமுகாம விஸ்தரிக்க 645 ஏக்கர் நிலம் அபகரிக்கப் பட்டுள்ளது. இவ்விடங்களில் இருந்த மக்கள் அடித்து விரட்டப்பட்டனர்.

பூநகரி கரையோரப் பிரதேசங்களான முகத்துவாரம்-பன்முனை-பாசிக்குடா-புங்குடுதீவு பகுதிகளில் கடற்படையினர் எவ்வித அச்சமுமின்றி நடமாடி மக்களுக்கு தொல்லைகொடுத்து வருகின்றனர்.

வல்வெட்டித்துறையில் இராணுவ வன்முறையை அடுத்து பல்லாயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர்.

கிளிநொச்சியில் இராணுவ வன்முறையால் 05 அகதிகள் முகாம்களில் 4,000 பேர் அகதிகளாக தங்கியுள்ளனர் கிளிநொச்சி முரசு மோட்டைப் பகுதி சுடுகாடாகவே காட்சியளிக்கிறது. அகதிசள் தங்கியிருந்த 07ம் வாய்க்கால் மகா வித்தியாலய கட்டிடமும், பரந்தன் பண்ணைக் கட்டிடமும் இராணுவத்தினரால் நொருக்கப் பட்டுள்ளது.

வசாவிளான் புதிய முகாமான வசாவிளான் மத்திய மகாவித்தியாலய இராணுவ முகாமிற்கும், பலாலி இராணுவ முகாமிற்கும் இடையில் அமைக்கப்பட்டபாதையில் இரு பக்கமும் உள்ள மரங்களில் இருந்து இராணுவத்தினர் எவ்வித அச்சமுமின்றி அப்பாதையால் போய் வரும் பொது மக்கள் மீது தாக்குதல் தொடுத்து வருகிறார்கள். இம் முகாம்களுக்கு-அருகாமையில் உருக்குலைந்த உடல்களும், உடலின் சில பாகங்களும் காணப்படுகின்றன.

யாழ் கோட்டை முகாமிலிருந்து மண்டைதீவு புதிய முகாமிற்கு படகு மூலம் தினமும இரவு, பகலாக உணவுப் பொருட்களும்-ஆயுதங்களும் பரிமாறப்படுகின்றன.

இவைகள் ஒரு புறம்; மறு புறம். அநுராதபுரத்தில் இருந்து 1000 இராணுவத்தினர் ஆனையிறவு முகாமை வந்தடைந்துள்ளனர்.

9-ம் பக்கம் பார்க்க.

# தமிழ் ஈழத்தில் இராணுவம் முற்றுகை

# நிதியின் தாக்கம் புரட்சிப் பாதையில்....

சிறிலங்கா தரகு முதலாளித்துவ அரசினதும், அவர்களது எஜமானர்களதும், எதிர்ப்புரட்சி சக்திகளினதும் கூட்டுச் சதிகளை முறியடித்து தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கிய பாதையில் கொண்டு செல்வதற்கு பெருந் தொகையான நிதி தேவைப்படுகிறது. தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் வெற்றி பெற உங்களால் இயன்ற நிதியுதவியை பொருளுதவியை வாரி வழங்குங்கள்.

முகவரி
K. ANANDAN
A/C No. 11506
Indian Overseas Bank
Branch Virugambakkam
Madras - 600 092
S. India.

# LTTE-ன் காட்டிக் கொடுப்பு

தினகரன் The Thinakaran
Largest Circulation in Sri Lanka
கொழும்பு
19-5-1986

வுக்கான புதிய தமிழ் ஈழக் குழுக் யில் புதுடில்லி ஈடு ார்த்தை நடத்து வள அமைச்சர் மைச்சர் திரு.பீ. யார் திடீரெனத்

செய்யும் முயற்சியில் புதுல்லி ஈடுபட்டுள்ளது. இந்த அடிப்படையிலே இந்திய அரசின் பூகியஸ்தர்களான திரு. நரசிம்மராவ், திரு. சிதம்பரம், திரு. பார்த்தசாரதி ஆகியோர் இப்போது சென்னைக்கு விஜயஞ் செய்து இம்முயற்சியில் ஈடுபட்டுள்ள

(2ம் பக்கம் பார்க்க)

## க்கான ஸ்தம்பிதம்!

லொறிகள், கார்கள் என்பன அடங்கும்.
இதேவிதமாக கொழும்பில் இருந்து யாழ் மாவட்டத்திற்குச் சென்ற சகல வாகனங்களும் வவுனியாவில் வைதது நடுத்து வைக்கப்பட்டுள்ளன. இதேவிதமாக திருகோணமலை

ளுக்குகள பலவறு ... முறைகள் அமுல் நடத்தப் படும்.



மேல்புள்ள படத்தில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவராக காணப்படுகிறார். இதில் வலது பக்கத்தில் காணப்படுபவர் முருகவேல் சக்திவேல், மற்றையவர்கள் அல் இந்திராணியும் ... பூராளியுமாவார்கள். இவர்கள் விடுதலைப் புலிகளின் தலைமைப் பீட உத்தரவிற்கமைய யாழ் மாவட்டத்திலுள்ள பிற இயக்கங்களின் முகாம்களை அரச கூட்டுப்படை தலைமைக் காரியாலயத்திற்கு அறிவிக்க வந்தனரென்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்ப் பகுதிக்குள் சிங்களவர் வாகனங்கள் வரக் கூடாதாம்!

நாங்கள் உங்களுக்
இலா
கொ
செ

கட்டாயங்களில் துரிதமான கடன்கள்

கார்கள், வே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் ஈழ மக்களின் நம்பிக்கை நட்சத்திரம் தலைவர் சிறீ சபாரத்தினம்



தமிழ் ஈழ மக்களின் இதயத்தைக் கொள்ளை கொண்ட—

தமிழ் ஈழ மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய—

புதுயுகத்தின் புயல் பறவை தலைவர் சிறி சபாரத்தினம்—

1986. மே. ஆறாம் நாள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் (LTTE) என்ற எதிர்ப்புரட்சிக்கும்பலால் படுகொலை செய்யப்பட்டார்.

அவரது வீர மரணம் உறுதிப்படுத்தப்பட்ட போதிலும், அதனை முற்றிலுமாக நம்ப முடியவில்லை. ஏனெனில், அவரது படைப்புக்கள் இன்னும் உயிருடன் இருக்கின்றன. அவரது சொற்கள் மறைந்த மாமேதை ஒருவரின் மறக்க முடியாத, மாறாத சொற்களாக ஒலிக்காமல், உயிருள்ள நண்பரின் அன்புச் சொற்களாக ஒலிக்கின்றன.

ஏனெனில், அவை நமக்கு அறிவு புகட்டுகின்றன • நம்மோடு விவாதிக்கின்றன. உயிர்த் துடிப்போடு ஒலிக்கின்றன. புதிய, புதிய கருத்துக்களை நமக்கு உணர்த்துகின்றன.

அவர் வாழ்க்கையை அறிந்தார்; அதனை நேசித்தார்; எனவேதான; வாழ்க்கையைப் பாழ்படுத்திய ஒவ்வொன்றையும் - ஒவ்வொருவரையும் அவர் வெறுத்தார்.

சிறி லங்காவின் ஆக்கிரமிப்பாளர்களை அவர் வெறுத்தார்.

ஏனெனில்,

அது நமது தேசத்தை-

-ஆபாசக் களஞ்சியமாக்கியது

-இருள் செறிந்த பூமியாக்கியது

-பயங்கர அடிமைகளாக எமது மக்களை மாற்றியது.

அவர் விரும்பியது புத்தம் புதிய பூமி: தமிழ் மக்களுக்காக பரந்த நிர்மலமான ஒளிவீசும் நிலப்பரப்பு.

தமிழ் பேசும் மக்களுக்கான புத்தம் புதிய பூமியை நிர்மாணிக்க- தமிழ் பேசும் மக்கள் அனைத்து ஒடுக்குமுறையிலும் இருந்துவிடிவு பெற-தமிழ் பேசும் மக்கள் சமாதானத்தை நோக்கி முன்னேற, ஒடுக்குமுறையாளர்களுக்கு எதிராக ஆயுதக் கிளர்ச்சி வரை தமிழ் பேசும் மக்கள் 'போராட வேண்டும் என்பதை உணர்ந்தவர்; உணர்த்தியவர் தலைவர் சிறி சபாரத்தினம்.

ஸ்ரீ லங்கா அரசின் ஒடுக்குமுறையால் தமிழ்பேசும்மக்கள் ஆடுமாடுகளாக மந்தைகளாக ஆக்கப்படுகிறார்கள், அவர்களுக்குகௌரவமான வாழ்வு மீண்டும் வருமென்ற நம்பிக்கை அறவே அற்றுப் போய்க் கொண்டிருக்கிறது. இதற்குரிய பரிகாரம் பிரதம மந்திரிகளையும், வேற மந்திரிகளையும் மாற்றுவதால் ஏற்படப் போவதில்லை, தமிழ் பேசும் மக்கள் முழங்காலில் நிற்பதால் பலமுள்ளவர்கள் மேலும் பலமுள்ளவர்களாக தெரிகிறார்கள். தமிழ் பேசும் மக்கள் எழுந்து நிமிர்ந்திட வேண்டும். சரித்திரத்திலே கருச்சிதைவுகளும், சுகப்பிரசவங்களும் உண்டு. சரித்திரத்திலே சுகமானதொரு புரட்சி பிரசவிக்க வேண்டுமானால், வெகு ஜனங்கள் கிளர்ந்தெழுந்து ஆட்சியைக் கைப்பற்றி ஒரு புதிய நிர்வாகத்தை ஏற்படுத்தி சுரண்டலையும்-வர்க்க பேதங்களையும் இல்லாமல் செய்ய வேண்டும். மக்கள் நாட்டின் வளங்களின் எஜமானர்களாக வேண்டும். இன்றைய அரசியல்வாதிகள் சமூகத்தின் இந்தப் புனருத்தாரண வேலையைச் செய்வதற்கு தகுதியற்றவர்களாகி விட்டார்கள் • சுதந்திரமும், சமாதானமும், சமதுவமும் இன்று அடைய முடியாததொன்றாகிவிட்டது • அப்படியானால் சமுதாயமே ஒரு அழுகிய சமுதாயமாகிவிட்டது. பந்தம் பிடிப்பதும் லஞ்சம் கொடுப்பதும் சமுதாய மரபாகிவிட்டது. இதனை தடுத்து நிறுத்த முற்பட்ட ஒரு சிலரையும் அரசு தொடர்ச்சியாக்கவும், விட்டுக் கொடுக்காமலும் ஒடுக்குகின்றது. நேர்மைக்கும்-மனித நேயத்திற்குமான போராட்டங்களை அரசு எப்ப வென்றாலும் விட்டதாகத் தெரியவில்லை. மக்கள் மடையர்களாகவும், கோழைகளாகவும் மாறாது விட்டால் அவர்களுக்கு வாழும் உரிமை மறுக்கப்படுகிறது. மனித இனத்திற்கு சர்வ வியாபகமாக ஒடுக்குமுறையை மன்னித்து மறக்கும் மனோபாவம் வேண்டுமாம்.

இவற்றை அனுமதித்தால் தமிழ்ச் சமுதாயமே காட்டுமிராண்டித்தனமாக போய்விடும் என்பதனை கண்டு கொண்டவர் தான் தலைவர் சிறி சபாரத்தினம்.

இவற்றை தடுத்து நிறுத்த வேண்டுமானால் அன்றேல் வாழ்க்கையில் ஏதாவது சிறிது மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமானால் விட்டுக்கொடாத, பிடிவாதமான போராட்டமில்லையெனில் அது இம்மியளவும் நடக்கப் போவதில்லை. அதற்காக புரட்சிகர போராட்ட அமைப்புகளை பலப்படுத்தாவிடில், கட்டி வளர்க்காதுவிடில் மக்களுக்கு விமோசனமோ விடுதலையோ வந்துவிடப் போவதில்லை.

இதனை தலைவர் சிறி சபாரத்தினம் நம்பியதன் விளைவே அவரது போராட்ட வாழ்வும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தில் (TELO) தன்னை இணைத்துக் கொண்டதுமாகும்.

சிறிலங்கா ஒடுக்குமுறையாளர்களின் அடக்குமுறையை காணச் சகிக்காத தலைவர் சிறி சபாரத்தினம் தனது குணம்சங்களை ஒத்த பல இளைஞர்களுடன் சேர்ந்து சிறி லங்கா அரசுக்கு எதிரான வன்முறைப் புரட்சியை மேற்கொண்டார்.

நல்லூரில் சிறிலங்கா அரசுக்கு ஆதரவாக இருந்து செயல்பட்டு, தமிழ் பேசும் மக்களது போராட்டங்களை பகிரங்கமாக காட்டிக் கொடுத்த சேர்மன் குமாரகுலசிங்கம் இவர்களாலேயே கொலை செய்யப்பட்டார். தமிழ் ஈழத்தின் முதலாவது அரசியல் படுகொலை இதுவாகும், தொடர்ந்து தமிழினத் துரோகி துரையப்பாவை கொலை செய்ய முயன்றதாகவும் இக்குழு மீது குற்றம் சுமத்தப்பட்டது.

இவற்றால் விழிப்படைந்த சிறிலங்கா ஒடுக்குமுறையாளர்கள் புரட்சிகர இளைஞர்களை சல்லடை போட்டுத் தேடினர் • பல நாட்கள் தேடுதல் வேட்டையின் பின்னர் தலைவர் சிறி சபாரத்தினம் உட்பட 42 இளைஞர்கள் 1973-பெப் 9, 10ம் திகதிகளில் கைது செய்யப்பட்டனர். தலைவர் சிறி சபாரத்தினம் முதலில் நீர்கொழும்பு சிறையிலும்-பின்னர் அநுராதபுரம் சிறையிலும் அடைக்கப்பட்டார்.

1974 ஜனவரியில் அரசியல் புரட்சியாளனாக தேடப்பட்டு, இந்தியாவில் கைது செய்யப்பட்ட தளபதி குட்டிமணியும முதலில் நீர்கொழும்பு சிறையிலும் பின்னர் அநுராதபுரம் சிறையிலும் அடைக்கப்பட்டார்,

சிறிலங்கா ஒடுக்குமுறையாளர்களின் இச் சிறைக் கூடங்களில் தான் தலைவர் சிறி சபாரத்தினமும்-தளபதி குட்டிமணியும்முதன் முதலில் சந்தித்துக் கொண்டனர்.

இருவரினதும் ஒரே கருத்து-ஒரே இலட்சியம்-ஒரே நோக்கு-ஒரே பார்வை; தேசபிதா தங்கத்துரையினது நடைமுறையுடன் ஒத்த கொள்கைகள்; தத்துவங்கள் இவைகள் தாம் தமிழ் பேசும் மக்களது விடிவிற்கு நீண்ட கால வேலைத்திட்டத்துடன் ஆயுதம் ஏந்திப் போராடும் டெலோவுடன் தலைவர் சிறிசபாரத்தினம் தன்னை இணைத்துக் கொள்ள வழி வகுத்தது.

1977ம் ஆண்டு தலைவர் விடுதலை செய்யப்பட்ட போதிலும், சிறிது நாட்கள் கழித்து துரையப்பா கொலை வழக்கு சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் மீண்டும் கைது செய்யப்பட்டார் தலைவர் சிறி சபாரத்தினம். ஓர் ஆண்டு காலம் ஒடுக்குமுறையாளர்களின் வதைக் கூடங்களில் மிதிப்பட்ட தலைவர் 1978ல் விடுதலை செய்யப்பட்டார்

விடுதலை செய்யப்பட்டதும் டெலோவுடன் தன்னை இணைத்துக் கொண்டார் தலைவர் சிறி சபாரத்தினம். தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் வேலைத் திட்டங்களில் உணர்வு பூர்வமாக செயல்பட்ட தலைவர் சிறி சபாரத்தினம், ஆயுதப் பயிற்சி பெற்றதோடு அரசியல் கல்வியும் கற்றுக் கொண்டார். இவரது எளிமையான வாழ்வும்-மக்களுடன் ஒன்றிணைந்த போராட்ட நோக்கும்-போர்க் குணும்சமும் தான் சிறி சபாரத்தினத்தை மாபெரும் தலைவராக்கியது.

டெலோவின் மூத்த தலைவர்களான தேச பிதா தங்கத்துரை-தளபதி குட்டிமணி-உட்பட பல போராளிகள் வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்டதும் டெலோவை வழி நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர் தலைவர் சிறி சபாரத்தினம்.

தமிழ் ஈழ மக்களினது உண்மையான விடுதலையும்-ஒடுக்கப்பட்ட சிங்கள மக்களினது நலன்களையும் இந்திய உப கண்டத்தினதும், இந்து மகா கடல் பிராந்தியத்தினதும் பாதுகாப்பையும், கருத்திற் கொண்டு தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தவர் தலைவர் சிறி சபாரத்தினம்.

அனைத்து மக்களினதும் ஆயுதப் பேரராட்டத்தின் மூலம் விடுதலையை வென்றெடுக்க பல்லாயிரக் கணக்கான இளைஞர்களை புரட்சியாளர்களாக்கியவர் தலைவர் சிறி சபாரத்தினம்.

இலங்கையிலும் - இந்திய உப கண்டத்திலும்-இந்து மகா சமுத்திரப் பிராந்தியத்திலும் அமெரிக்க ஏகாதிபத்திய சதிகளை முறியடிக்கவும், எமது மக்களின் விடுதலையை வென்றெடுக்கவும் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளுடனும்-உலக ஒடுக்கப்பட்ட மக்களுடனும்-முற்போக்கு சக்திகளுடனும் மனித நேயத்தை உயர்த்திப்பிடிக்கின்ற அரசுகளினதும் ஆதரவுகளை வென்றெடுத்து விடுதலையை வெற்றியின் பாதையில் இட்டுச் சென்றார் தலைவர் சிறி சபாரத்தினம்.

கெரில்லாப் பாணியிலான தாக்குதலை முற்றிலும் மாற்றி, தமிழ் ஈழ மக்களது பாதுகாப்பை கருத்திற் கொண்டு சிறிலங்கா ஆயுதப் படைகளுக்கு எதிரான தாககுதல்களை தாமே முன்னின்று நடத்தியவர் தலைவர் சிறி சபாரத்தினம்.

தமிழ் ஈழ விடுதலைக்காக போராடும் ஏகாதிபத்தியஎதிர்ப்பு சக்திகளை ஒன்றிணைப்பதன்மூலமே விடுதலையை வென்றெடுக்க முடியும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்ட தலைவர் சிறி சபாரத்தினம் எமது தோழமைஅமைப்புகளான EPRLF, EROS உடன் கூட்டுச் சேர்ந்து ஈழம் தேசிய விடுதலைமுன்னணியை (ENLF) கட்டியதோடு, ஒன்றிணைந்த தாக்குதல்களை நடத்தவும், பொது வேலைத்திட்டத்தில் செயல்படவும் ஆக்கபூர்வமான செயல் திட்டங்களை தீட்டினார்.

இவ்வாறாக, சர்வதேச ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளினதும்-தமிழ் ஈழ மக்களினதும் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய தலைவர் சிறி சபாரத்தினம் ஏகாதிபத்திய சக்திகளினது சுரண்டல் விஸ்தரிப்பிற்கு இடையூறாக தென்பட்டதால் அவரை தீர்த்துக்கட்ட திட்டமிட்டனர்.

இயல்பாகவே பதவி மோகமே குறிக்கோளாகக் கொண்ட தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் (LTTE) அமைப்பை விலைக்கு வாங்குவதில் வெற்றி கண்ட ஏகாதிபத்திய சக்திகள் இவர்கள் (LTTE) மூலம் தலைவர் சிறி சபாரத்தினத்தை தீர்த்துக் கட்ட தயாராகினர்.

இதற்காக, ஏகாதிபத்திய சக்திகளிடம் இருந்து 3-கோடி ரூபாயை பெற்றுக் கொண்டு LTTEயினர் நாயைப்போல தேடியலைந்து சிறிலங்கா ஆயுதப் படைகளிலும் பார்க்க பன்மடங்கு மோசமான முறையில் செயல்பட்டு தலைவர் சிறி சபாரத்தினத்தை தீர்த்துக் கட்டினார்கள்.

தலைவர் சிறி சபாரத்தினத்தின் பிரிவு தமிழ் பேசும் மக்களுக்கு மிகப் பெரிய நஷ்டமாகும். எனவே தான், அவர் பிரிந்தார் என்று நம்புவதே கஷ்டமாக உள்ளது. ஆனால் இந்த எதிர்ப்புரட்சிக் கும்பல் LTTEன் ஆயுத மிரட்டலுக்கு பின்வாங்கி; ஏகாதிபத்திய சக்திகளது சதி வலைக்கு பலியாகி நாம் போராட்டத்தை கைவிட்டு ஓடப்போவதில்லை. தலைவர் சிறி சபாரத்தினத்தின் பூதவுடல் மறைந்துவிட்டது என்பது உண்மை தான். ஆனால், அவர் உயிருடன் நம்மோடு உலவிய காலத்தில் அவரை நேசித்ததுபோலவே, தற்போதும் நாம் அவருடைய வேலையை தொடர்ந்து செய்கிறோம். அவருடைய நஷ்டத்தை ஈடு செய்யும் வகையில் நாம் பன்மடங்கு செயலாற்றுகிறோம் • கற்பனைக்கு எட்டாத தீர்க்க தரிசனமும் புன்னகை தவழும் அவரது முகமும, தடித்த நெடிய உருவமும் உள்ள தலைவர் சிறி சபாரத்தினம் மறையாமல் இன்னும் உயிருடன் இருக்கிறார் என்ற உணர்வில் நாம்செயல்படுகிறோம். அவர் போல நாமும் வாழ்க்கையை நேசிக்கிறோம் • அவர்போல ஒடுக்குமுறையாளர்களுக்கு எதிராக இறுதிவரை போராடுவோம் • இதனால் நாம் என்றும் வெல்லப்பட முடியாதவர்களே.

www.tamilarangam.net

# எதிர்ப்புரட்சியாளர்களை தோற்கடிப்போம்

## கலைஞர் கண்ணீர்...

### "தாங்கிக் கொள்ள முடிய வில்லை. தவிக்கிறேன்"

● ஈழ விடுதலைப் போராளிகளின் இனமானத் தலைவர்களாக ஒளி விட்ட தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன் மூவரும் இலங்கையின் வெலிக்கடை சிறையில் கொல்லப் பட்ட பின்னர் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தை தலைமையேற்று ஈழ விடுதலைப் போராட்டத்தை நடாத்தியவர் அஞ்சா நெஞ்சம் தலைவர் சிறி சபாரத்தினம்.

● எதிரியைத் தடுத்திட எடுத்திட வேண்டிய ஆயுதங்கள் இனத்தின் இரத்தத்தையே குடித்து மகிழத் தொடங்கி விட்டது.

● ஈழ விடுதலை இன்னும் எவ்வளவு தொலைவில் இருக்கிறதென்று தெரியாத நிலையிலேயே ஆட்சிப் பொறுப்புக்கு யார் வருவது என்பதில் போராளிகளின் பல்வேறு குழுக்கள் ஆயுதம் தாங்கிப் போரிட்டு ஒருவரையொருவர் மாய்த்துக் கொண்டு மடிந்து போகிற அவலம் இப்போதே ஆரம்பமாகிவிட்டது.

● கூட்டுச் சேர்ந்த ஒற்றுமை நெடிது நாள் நிற்கவில்லை. யாரோ சாமர்த்திய சாலிகள் "சகுனி" வேலையில் இறங்கி வெற்றி பெற்று விட்டனர். இந்தப் பிரித்தாளும் சக்திக்கு ஈழ விடுதலைப் போராளிகளின் பாசறைகளில் எப்படியோ நடைபாவாடை விரிக்கப்பட்டு விட்டது.

● எதிரிகளை மறந்துவிட்டு தங்களுக்குள்ளேயே மோதிக் கொள்ள "குருஷேத்திரம்" அமைத்துக் கொண்டார்கள்.

● மதுரையில் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு மாநாடு-மத்திய அரசின் சார்பில் குழு-ஒன்று இலங்கையில் பேச்சுவார்த்தை.

● இப்படியொரு வாய்ப்பைக் குலைப்பது போல யாரோ நடத்துகிற சகுனி வேலையில் போராளிகள் பலியாகலாமா? என்ற கேள்வியை மதுரைக்கு வந்த போராளிகளிடையே கேட்டோம்.

● அனைவருமே எங்கள் வேண்டுகோளையேற்று ஒற்றுமையுடன் செயலப்படுவதாக உறுதி மொழி உரைத்தனர்.

● ஆனால் மீறி விட்டனர்! எல்லோருமல்ல! சிலர் மீறி விட்டனர்

● போராளிகளின் தலைவனையே சுட்டுத் தீர்த்துவிட்டனர். சகுனியின் சூழ்ச்சி பலித்து விட்டது.

● ஆடுகள் முட்டிக் கொள்ள; அப்போது வழியும் ரத்தத்தை நரிகள் குடிதது மகிழ்கின்ற கதையைப் பால பாடத்திலேயே படித்திருக்கிறோம்; படித்ததை மறந்தவர்களையெண்ணிப் பதைத்துப் போகிறோம்! விரக்தி அடைகிறோம்!

● உடன் பிறப்பே! சீரங்கப் பட்டிணத்து திப்புசுல்தான் கதையே ஞாபகத்திற்கு வருகிறது.

"எட்பக வண்ண சிறுமைத்தே ஆயினும்.

உள்பகை உள்ளதாம் கேடு"

எனும் குறளின் பொருளை இனியாவது ஈழ விடுதலைப் போராளிகள் உணர்ந்து செயல்ப்பட சபாரத்தினம என்ற வீரத்தம்பியின் தியாகம் உதவட்டும்.

## "ஆரோக்கியமான அரசியல் வளர்ச்சியல்ல" -EROS கண்டனம்

டெலோ இயக்கத் தலைவர் சிறி சபாரத்தினத்தைக் கொல்ல முயற்சித்த புலிகள் அமைப்பு எத்தகைய காரணங்களைக் குறிப்பிட்டாலும், இச்செயலை ஈழப் புரட்சி அமைப்பு (EROS) வன்மையாக கண்டிக்கிறது.

தனிநபர் கொலைகள் பிரச்சனைகளை வளர்க்கத் தான் உதவும். புலிகள் தமது தவறுகளை உணர்ந்து பிரச்சனைகளை பேசித் தீர்க்க முன்வரப் பழகிக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு தொடர்ந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஆரோக்கியமான அரசியல் வளர்ச்சிக்கு உதவாது.

சிறிய காரணத்தை முன்வைத்து சண்டையை வளர்த்து எமது இயக்கத்தை அழிக்க பிரபாகரன் குழுவினர் திட்டமிட்ட முறையில் செயல்ப்பட்டுள்ளார்கள். ஆனால் இதற்காக நாம் அவர்களைப் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் எமக்கில்லை. எமது எதிரி போராளிகளல்ல. சிறிலங்கா அரசே!

## "புனிதமான பாதையில் கறைபடிந்த அத்தியாயம்" -PLOT- கண்டனம்

அரசியல் முரண்பாடுகளை இராணுவ மேலாதிக்கத்தினூடாக தீர்க்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும். விடுதலைப் போராட்டத்தை வலிமையான போராட்டமாக முன்னெடுப்பதற்கு இயக்கங்களின் ஒற்றுமையும். மக்களின் உணர்வுபூர்வமான ஒத்துழைப்பும் தேவை.

விடுதலைப் போராளிகளையும், பொது மக்களையும், டெலோ இயக்கத் தலைவர் சிறிசபாரத்தினத்தையும் படுகொலை செய்ய திட்டமிட்ட சதியை வன்மையாக கண்டிக்கிறோம. பிரபாகரன் கூறும் எக்காரணமாயினும் அதை அவர்கள் அணுகிய முறையும் கையாண்ட வழி முறைகளும் மிக மிக கொடூரமானவையும், அராஜகமானவையுமாகும்.

விடுதலைக்காக வாழ்வைத் தியாகம் பண்ணி களம் வந்த இளைஞர்களை இவ்வாறு அழிப்பது மக்கள் எதிரிககு எதிராககொதித்து எழும் தன்மையை மழுங்கடிக்கும்.

## "ஈழப்போராட்ட வரலாற்றில் என்றும் அழியாத இரத்தக் கறை" -EPRLF கண்டனம்

கடந்த 09 தினங்களாக நடந்து முடிந்த சம்பவங்கள் ஈழப் போராட்ட வரலாற்றில் என்றும் அழியாத இரத்தக் கறையை ஏற்படுத்தியுள்ளது இதுவரையும் போராளிகளின் தியாகததால், அவர்கள் சிந்திய இரத்தத்தால் பெருமையடைந்த எமது மண் இன்று அதே போராளிகள் தமக்கிடையிலான முரண்பாட்டால் கொல்லப்பட்ட கோரச் சம்பவங்களால் கறைபடிந்து போயுள்ளது.

வீரத்தால் வீறுப்படைந்த எங்கள் தேசக காறறு கருக்கபபட்ட போராளிகளின் சடலங்களால் நச்சுப்படுத்தப்பட்டுள்ளது.

பெருமை பேசிக் கொண்ட பெற்ற வயிறுகள் பற்றி எரிகின்றன.

இந்த நிலைமையையிட்டு வெற்றிப் பெருமிதம் கொள்வது வெட்கக் கேடானது; வேடிக்கையானது.

மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைக்களுக்கான அச்சுறுத்தல் பாசிசத்தின் வெளிப்பாடாகும்.

# செய்திகள்....

## அராஜகவாதிகளின் காடைத்தனத்திற்கு 4பேர் பலி.

கடந்த 12-06-1986 நள்ளிரவு 11-30 மணிக்கு மல்லாகத்தில் அராஜக கும்பல்களால் 03 பேர் கோரமாக வெட்டப்பட்டு எரிக்கப் பட்டனர். ஒருவர் ஆபத்தான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இரவு 11-30 மணிக்கு உறங்கிக் கொண்டிருந்த மல்லாகம் நீதிமன்ற வீதியைச் சேர்ந்த நாகலிங்கம் சுப்பிரமணியம் (வயது 32) என்பவரை அராஜகவாதிகள் அழைத்துச் சென்று அவர் மூலமாக விக்கி என்றழைக்கப்படும் நாகராஜா விக்கினேஸ்வரன் (வயது 20) என்பவரையும் தம்பிப்பிள்ளை கனகசபை (வயது 60) வைத்தி அந்தோனிப்பிள்ளை (வயது 41) ஆகியோரையும் அழைத்துச்சென்று வயலுக்கு அருகாமையில் உள்ள பெரிய தம்பிரான் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள கந்தகத்தில் விசாரணை நடாத்தினர். தனது மகனை விக்னேஸ்வரன கடத்தப்பட்ட செய்தி கேட்டு அவ்விடத்திற்கு விரைந்த தகப்பனார் நாகராசா என்பவரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். விசாரணையின் முடிவில் அராஜகவாதிகள் கைக் கோடாரியால் 4 பொது மக்கள் மீதும் தாக்குதல் நடாத்தினர் இறுதியில் நான்கு பேரையும் உயிருடன் ஒன்றாக போட்டு தீ மூட்டிவிட்டு அராஜகவாதிகள் ஓடிவிட்டனர் அடியில் அகப்பட்ட இருவர் அவ்விடத்திலேயே துடிதுடித்து இறந்தனர், வைத்தி அந்தோனிப்பிள்ளை எரிகாயங்களுடன் வீட்டை வந்தடைந்து மரணமானார். விக்கினேஸ்வரன குற்றுயிரான நிலையில் தெல்லிப்பழை மருத்துவ சாலையில் அனுமதிக்கப்பட்டு, அங்கிருந்து யாழ் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

●

## பலவந்தக் குடியேற்றத்திற்கு சிங்கள மக்கள் கடும் எதிர்ப்பு !!!

தமிழ்ப் பகுதிகளில் குடியேறும் படி சிறிலங்கா ஆயுதப் படைகளும், அரசு அதிகாரிகளும் நிர்ப்பந்தம் செய்கின்றனர். இதற்கு தடை விதிக்க வேண்டும் என்று கோரி சிறிலங்கா சுப்ரீம் கோர்ட்டில் சிங்களப் பெண் குசுமதியின் சார்பில் மனுத் தாக்கல் செய்யப் பட்டுள்ளது. சிறிலங்காவில் இலவச சட்ட வழக்கறிஞர் குசுமதியின் இந்த மனுவை தாக்கல் செய்தார்.

திருமலை மாவட்டத்திலுள்ள தொகிவத்தே கிராமத்திற்கு என்னுடைய கணவன், குழந்தைகளை பொலிசார் பலவந்தமாக அழைத்துச் சென்றனர். அங்கு போராளிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து அங்குள்ள சிங்கள மக்கள் வெளியேறி தங்களது சொந்த இடங்களுக்கு சென்றலர். குசுமதியின் குடும்பமும் தமது சொந்த இடத்திற்கு சென்று கொண்டிருந்தது. ஆனால் பொலிசார் அவர்களை இடைமறித்தனர், புதிய குடியேற்றத்தை விட்டு ஏன் வந்தீர்கள் என்று கேட்டு பொலிசார் தாக்கினர். படுகாயமடைந்த குசுமதி-வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டார். பொலிசாரின் அடாவடித்தனங்களுக்கு பயந்து அங்கிருந்து அவர் தப்பியோடிவிட்டார்.

அரசியல் சட்டத்திலுள்ள விரும்பிய இடத்தில் வாழும் உரிமையை மறுக்கும் ஆயுதப் படைகளினதும், அரச அதிகாரிகளினதும் செயலுக்கு தடை விதிக்க வேண்டும்

இவ்வாறு அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

●

www.tamilarangam.net

# சிறீலங்கா நவபாசிஸ ஒடுக்குமுறையில் எமது மக்களின் நிலை

## 13-6-86

வவுனியாவில் 1000க்கு மேற்பட்ட ஆயுதப் படையினர் கவச வாகனங்கள் சகிதம் கச்சான்குளம் பண்டாரிகுளம் ஆகிய பகுதிகளை சுற்றிவளைத்து சல்லடை போட்டு தேடுதல் வேட்டை நடாத்தினர். முகமூடி அணிந்தவர்களை கிராமம் கிராமமமாக அழைத்துச் சென்ற ஆயுதப்படைகள் 10 பேரை கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களில் பாடசாலை - பல்கலைக்கழக மாணவர்களும், தபால் நிலைய உத்தியோகத்தர்களும் அடங்குவர். எனினும் கைது செய்யப்பட்டவர்கள் பற்றிய முழுமையான விபரங்கள் கிடைக்கவில்லை.

திருமலை பெரியகடைப் பகுதியை சுற்றிவளைத்த இராணுவத்தினர் 150 தமிழர்களை கைது செய்தனர்.

இரவு 11. 00 மணியளவில் மண்டைதீவுக்குஅப்பால் நடுக்கடலில் நின்ற, கடற்கப்பல் விரசூரியாவில் இருந்துகரையோரப் பகுதிகள் மீது ''செல்'' தாக்குதல் மேற்க் கொள்ளப்பட்டது. இதனுல் அப்பகுதி மக்கள் படிப்படியாக வெளியேறி வருகின்றனர்

மாலை மன்னுரை அடுத்துள்ள பரப்புக் கடந்தன் - மாந்தை ஆகிய பகுதிகளில் - நடாத்தப்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதலுக்கி 26 தமிழர்கள பலியானுர்கள். இதனைத் தொடர்ந்து தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து மேற்க் கொள்ளப்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதலில் 13 வீடுகள் பலத்த சேதமடைந்தன. பல தமிழர்கள் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மூதூர் பகுதியில் உள்ள ஈச்சழம்பத்தையில் தமிழ் அகதிகள் முகாமிற்கு உணவுப் பொருடகள் எடுத்துச் சென்ற 03 அரசாங்க அதிகாரிகளும் 22 தமிழ் மக்களும் ஆயுதம் ஏந்திய சிங்கள காடையர்களால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டனர். கொலை செய்யப்பட்டவர்களில் 02 முஸ்லிம் கிராம சேவையாளர்களான ''அலிமுகதீன்-அப்துல் மஜீத்'' ஆகியோரும் தமிழ் கிராம சேவையாளரும் அடங்குவர்- ஏனையோர் அகதிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

## 14-6-86

வவுனியா - ஆனையிறவு - மாங்குளம் ஆகிய இடங்களில் யாழ்ப்பாண பகுதியை சேர்ந்த 15 பேர் கைது செய்யப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் இருந்து வாகனங்களில் பயணம் செய்த இவர்கள் முகாம்களில் தடுத்து நிறுத்தப்பட்டு விசாரணைக்காக அழைத்துச செல்லப்படடனர். இவர்களிடம் வெளிநாடு செல்வதற்கான பாஸ்போட்-விசா இருந்ததாக கூறப்படுகிறது.

நேற்றைய தினம் திருமலை பெரிய கடைப் பகுதியில் கைதான தமிழர்களில் 60 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து தனியார் வாகனம ஒன்றில் வந்து கொண்டிருந்த ''போனஸ்'' என்பவர் ஊர்காவல் படையினரால் வாகனத்தில் இருந்து இறக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார் இதன் பின்னர் ''நீனஸ்'' என்ற ஒரு அதிகாரியும் 6-ம் கட்டைச் சந்தியில் வைத்து இறக்கி அழைத்துச் செல்லப்பட்டார். இவ் வாகனத்தில் பயணம் செய்த ஏனைய 28 தமிழர்களின் நிலை பற்றி தெரியவில்லை.

## 15-6-86

கிளிநொச்சி பகுதியில் உள்ள இரத்தினபுரம் - திருவையாறு - ஜெயந்தி நகர் - கிளிநொச்சி நகர் போன்ற பகுதிகளில் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல் நடாத்தின இதனுல் சில பகுதிகளில் பாடசாலைகளும் - கட்டிடங்களும் வாழைத் தோட்டங்களும் சேதமுற்றன. கிளிநொச்சி வைத்திய சாலை மீது விழந்த குண்டால் கட்டிடம் பலத்த சேதமடைந்தது.

யாழ், கோட்டை இராணுவ முகாமிலிருந்து கொட்டடி பக்கமாக ''செல்'' தாக்குதல் மேற்க் கொள்ளப்பட்டது. இதனுல் 02 தமிழர்கள் காயமடைந்ததோடு, வீடு ஒன்று பலத்க சேதத்திற்குள்ளாகியது

## 16-6-86

கொழும்பு கொல்லுப்பிட்டியில் காரில் சென்று கொண்டிருந்த மனுேகரன் - இந்திரகுமார் - சூரியகுமார் - கணேஸ் - பிரபாகரன் ஆகிய 05 வடபகுதி இளைஞர்களை பொலிசார் கைது செய்தனர்.

மண்டைதீவில் நிலை கொண்டிருக்கும் பீரங்கிப் படகில் இருந்து அதிகாலை முதல் பல மணி நேரங்கள் ''செல்'' தாக்குதல் இடம் பெற்றது.

கிளிநொச்சிப் பகுதியில் மதகு ஒன்றும், இரணைமடுவில் போக்குவரத்து பாதையும் இராணுவத்தால் குண்டுவைத்து தகர்க்கப்பட்டுள்ளது.

மயிலிட்டி மாதா கோவிலுக்கு அருகாமையில் காலை 9. 00 மணிக்கு கால் நடையாகவும், வாகனங்களிலும் வந்த இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 03 வயது சிறுமி தலை சிதறி கொல்லப்பட்டாள். இச்சிறுமி மாதா கோவிலுக்கு அருகாமையில் கடை வைத்திருக்கும் தவம் என்பவரின் புதல்வியார் ஆவார். மேலும் இச் சம்பவத்தில் சிறுமியின் தாயார் த. ராசகுமாரி (வயது 23), சிசிலியா (வயது 16), சிசிதன் (வயது 12), சி. ஞானரஞ்சிதம் (வயது 43), S சியாமளா (வயது 16) ஆகியோர் காயமடைந்தனர்.

காங்கேசன் துறையில் கப்பலில் வந்திறங்கிய கறுப்புச் சட்டை அணிந்த 500 இராணுவத்தினர் மயிலிட்டி ஊடாக தொண்டமானுறை நோக்கி நடந்து கொண்டிருந்த போது, அச்சுவேலியில் தோட்டத்தில் வேலை செய்த மணற்காட்டைச் சேர்ந்த நல்லதம்பி உருத்திரகுமார் (வயது 17) என்பவரை அழைத்துச் சென்று கொடூரமாக சித்திரவதைகள் செய்த பின்னர் சுட்டுக் கொன்றனர்.

## 17-6-86

மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறு மூலையிலிருந்து 01 K M. தூரத்திலுள்ள களுவன்கேணியில் பகல் 02 மணிக்கும் 04 மணிக்கும் இடையில் 07 அப்பாவித் தமிழர்கள் அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு நீண்ட சித்திரவதைகளுக்குப் பின்னர் கை, கால்கள் கட்டப்பட்டு அரை உயிருடன் கண்கள் தோண்டியெடுக்கப்பட்ட பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

வவுனியாவில் பம்பைமேடு - திருவைக்காடு - துவான் குளம் ஆகிய இடங்களில் இராணுவத்தினரின் தீவிர தேடுதல் வேட்டையின் போது நவநீதராசா - பாரதிராசா - ஜெயபாலசுந்தரம் - உதயகுமார் - கந்தசாமி - துரைமாணிக்கம் - பரமேஸ்வரன் - விஸ்வா ஆகிய 08 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து நடாத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் துரைசாமி அன்னலட்சுமி (வயது 54) என்பவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து மேற்க்கொள்ளப்பட்ட மோட்டார் ''செல்'' தாக்குதலில் புனித சேவியர் கட்டிடம் சேதமடைந்தது. அங்குள்ள 03 கன்னியர்களும், 02 இளம் பெண்களும் மயிரிழையில் உயிர் தப்பினர்.

காலை 07 மணியிலிருந்து தாழப் பறந்து சென்ற ஹெலிக்கப்டர்கள் ஏழாலை வடக்கு, கட்டுவன் போன்ற பகுதிகளில் காலை 8-30 மணியிலிருந்து 8. 45 வரை சரமாரியாக சுட்டதில் ஏழாலைச் சேர்ந்த ராஜலட்சுமி, நாதன் ஸ்ரீதேவி என்ற 02 பெண்கள் படுகாயமடைந்தனர்.

## 18-6-86

திருமலை மாவட்டத்தில் விசேட ஆயுதப்படையினர் நடாத்திய தீவிர தேடுதல் வேட்டையின் போது 23 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

## 19-6-86

மன்னுர் மாவட்டத்தில் இராணுவத்தினர் சுற்று வளைத்ததில் EROS அமைப்பை சேர்ந்த 03 போராளிகள் கைது செய்யப்பட்டனர். EPRLF போராளிகள் இருவர் காயமடைந்தனர்.

இரவு கடலில் EPRLF போராளிகளுக்கும் - கடற்படையினருக்கும் இடையில் ஏற்ப்பட்ட நேரடி மோதலில் EPRLF போராளிகள் 14 பேர் வீரமரணம் அடைந்தனர்.

## 20-6-86

வசாவிளான் கோவிலில் பிரார்த்தனையை முடித்துவிட்டு வசாவிளான் இராணுவ முகாமிற்கு அருகிலுள்ள வீதியால் வந்த கத்தோலிக்க குருவானவரை இராணுவத்தினர் பிடித்து துடிக்க. துடிக்க வெட்டி பின்னர் சுட்டுக் கொன்றனர்.

கொழும்பில் பல பகுதிகளில் இராணுவமும், பொலிசாரும் சேர்ந்து நடாத்திய தேடுதல் வேட்டையின் போது 200க்கு மேற்பட்ட தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தால் நடாத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் தமிழ் நாட்டைச் சேர்ந்த 66 வயதான மதகுரு ''வின்சன்'' ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமானுர்.

LTTE யினரின் விசைப்படகு கடற்படையினரால் தாக்கப்பட்டது. இதில் வேதாரண்ய கரைப் பொறுப்பாளர் சுகுமார் மற்றும் 12 பேர் கொல்லப்பட்டனர்.

கடந்த 18. 06. 1986 இரவு கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த தனியார் பஸ் வண்டி நீர் கொழும்பிற்கு அண்மையிலுள்ள வாய்க்கால் என்ற இடத்தில் சைக்கிளில் வந்த ஒருவரை மோதியதால், அங்கிருந்த சிங்கள காடையர்கள் பஸ்சை தீவைக்க முயன்றனர். வண்டியிலிருந்த 40 பயணிகளும் சிதறி ஓடினர். இதில் 20-பேர் இன்று யாழ்ப்யாணம் வந்து சேர்ந்தனர் பெண்கள் உட்பட ஏனைய பயணிகளின் நிலை தெரியவில்லை.

## 21-6-86

கடந்த 18. 06. 1986 இரவு இராணுவத்தினரால் மாமங்கம் என்னுமிடத்தில் வைத்து கைது செய்யப்பட்ட மகேந்திரராசா (வயது 22), ந. பரமசிவராஜசிங்கம் (வயது 19) ஆகிய 02 தமிழ் இளைஞர்களும் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் இன்று கண்டு பிடிக்கப்பட்டனர்.

குருநகர் துறைமுகப் பகுதியிலிருந்து ''அன்னை மேரி'' என்ற படகில் இந்தியா நோக்கி வந்த 34 அகதிகள் மன்னுர் கடற்பகுதியில் காஞ்சிக் குடாவில் வைத்து கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

## 22-6-86

வசாவிளான் முகாமிலிருந்து நடாத்திய பீரங்கித் தாக்குதலால் அதே இடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் கனகரத்தினம் (வயது 45) அவரது மகள் தயானி ஆகிய இருவரும் கொல்லப்பட்டனர்.

வசாவிளானில் இராணுவ வன்முறையால் பல பொதுமக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். மீண்டும் உணவுப் பொருட்களை எடுப்பதற்காக வீட்டை நோக்கி சென்று கொண்டிருந்த C. சிவகரன் (வயது 30) C. சிவநேசன் (வயது 26) கி கிருஷ்ணகுமார் - (வயது 14) ஆகியோர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட காட்டுப் பிரதேசங்களில் இராணுவம் பலத்த தேடுதல் வேட்டை நடாத்தி வருகிறது.

மட்டக்களப்பிலிருந்து வேலை நிமித்தம் தமிழ் இளைஞர்கள் புகைவண்டியில் கொழும்பு நோக்கி வந்தபோது, மின்னேரியா தரிப்பிடத்திற்கு அருகாமையில் குண்டர் கோஷ்டி ஒன்று ஏறி பயங்தர ஆயுதங்களினுல் பயணிகளை தாக்கியதுடன் தாக்குதலுக்குள்ளான 10 பேரை கடத்திச் சென்றுள்ளனர். பின்னர் மின்னேரியா தரிப்பிடத்தில் வைத்து 25க்கு மேற்பட்ட தமிழர்களை இராணுவத்தினர் கைது செய்தனர்.

## 23-6-86

ஆனையிறவு முகாமிலிருந்து பி. ப 1. 00 2. 00 மணிவரை பீரங்கித் தாக்குதல் நடைபெற்றது.

பரந்தன் சந்தியில் மேற்க்கொள்ளப்பட்ட ''செல்'' தாக்குதலில் பெரியசாமி சிவசுப்பிரமணியம் என்பவர் படுகாயமடைந்தார்.

மாலை கிளிநொச்சி கனகபுரம் - ஜெயந்திநகர் - உருத்திரபுரம் ஆகிய பகுதிகளுக்கு மேலாகப் பறந்த வொம்பர் விமானங்கள் சுமார் 1/2 மணி நேரம் குண்டுகளை வீசியதோடு, துப்பாக்கிப் பிரயோகமும் மேற்க் கொண்டன.

பூநகரி கல்முனைக்கருகே உள்ள கடலில் சூட்டுக் காயங்களுடன் இரு சடலங்கள் ஒதுங்கியுள்ளன.

முல்லைத்தீவில் ஹெலிக்கப்டர்களும், வொம்பர் விமானங்களும் தாக்குதல் மேற்க் கொண்ட போது வயோதிபர் ஒருவரும், இளைஞர் ஒருவரும் கொல்லப்பட்டனர். 5 பேர் காயமடைந்தனர். இதில் பெண் ஒருவர் கவலைக்குரிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பல வீடுகளும், வர்த்தக நிலையங்களும் சேதமடைந்தன.

மட்டக்களப்பு திருக்கோயில் பகுதியில் நடாத்தப்பட்ட தேடுதல் வேட்டையின் போது 316 தமிழர்கள் கைது செய்யப்பட்டு 300 பேர் அக்கரைப்பற்று இராணுவ முகாமிற்கும் 16 பேர் கல்லடி இராணுவ முகாமிற்கும் கொண்டு செல்லப்பட்டனர்.

www.tamilarangam.net

# தமிழ் ஈழத்தின் பகைவர்களுக்கு எதிராக தமிழக மக்கள்...




**D R. பாண்டியன்**

**மங்களபுரம்**

**சேலம்**

கடந்த 21-05-1986ல் T.V. யில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் (LTTE) அமைப்பைச் சேர்ந்த பாலசிங்கம அளித்திருந்த பேட்டியை கண்டேன். அந்தப் பேட்டியில் டெலோ தலைவர் சிறீ சபாரத்தினத்தை LTTE படுகொலை செய்தது சரியென காட்டப்பட்டது. டெலோ-அமைப்பு சிறீ சபாரத்தினத்தால் சமீப காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது என்று பாலசிங்கம் கூறியிருப்பது முற்றிலும் தவறானது. டெலோவை முதன் முதலில் ஆரம்பித்தவர் தேசபிதா தங்கத்துரை. அந்த அமைப்பின் தளபதி குட்டிமணி, தங்கத்துரையின் தலைமையின் கீழ் டெலோவில் சிறீ சபாரத்தினம் உட்பட பிரபாகரனும் இருந்து வந்தனர். டெலோவன் மூத்த தலைவர்கள் வெலிக்கடையில் கொல்லப்பட்டதும் டெலோவின் தலைமைப் பொறுப்பை சிறீ சபாரத்தினம் ஏற்று மிகவும் திறமையாக சிறீ லங்கா அரசுக்கு எதிரான தாக்குதல்களை தொடுத்ததை உலகம் அறியும். நான் டெலோ தலைவர் சிறீசபாரத்தினத்தை பலதடவைகள் சந்தித்து ஈழத் தமிழர் பிரச்சனை பற்றி நிறைய விவாதித்துள்ளேன TELO போராளிகளையும் சந்தித்து பேசியுள்ளேன்.

அனைத்துப் போராளிகளுமே பயங்கர பயிற்சியின் பின்னர் முழுத்திறமை பெற்ற போராளிகளாக வெளியேறுகின்றனர். பாலசிங்கம் கூறுவது போல டெலோ போராளிகள் சமூக் துரோகிகள் அல்லர். ஒழுக்கக் கட்டுப்பாடும் விவேகமும நிறைந்த உண்மையான போராளிகள். டெலோ அமைப்பின் தாக்குதல்களையும், வளர்ச்சியையும கண்டு பொறாமை கொண்ட LTTE இற்கும் TELO விற்கும் இடையே நிறைய கருத்து வேறுபாடுகள் இருந்தது உண்மை கருதது வேறுபாடுகளை நியாயமான பேச்சு வார்த்தை மூலம் தீர்க்க வேண்டும் என்ற நியதியை மீறி சபாரத்தினத்தை கொன்று விட்டனர்.

முறையான பேச்சுக்களினுல் தீர்வுகாண முடியாமல் போனுலும் கூட மற்றைய தோழமை இயக்கங்கள் மூலமாகவும் தமிழ ஈழத்திற்காக போராடுகின்ற அமைப்புகளிடமாவது TELOவுடனுன கருத்து வேறுபாடுகளை கூறி தீர்த்திருக்கலாம். அதைவிடுத்து, பிரபாகரன் தான் செய்வது சரி என்ற சர்வாதிகார போக்கில் காட்டுமிராண்டித் தனமாக நடந்து கொண்டது கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

தாங்கள் செய்த தவறை பிழையென ஒப்புக் கொள்ளாவிட்டாலும், அதை மறைப்பதற்காக மேலும் நிறைய பொய்க் குற்றங்களை சுமத்தி தாங்கள் நேர்மையற்றவர்கள் என்பதை பிரபாகரன் நிரூபித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் முடங்கிக் கிடந்த இராணுவம் தற்போது வெளியேறி மக்களை கொன்று குவிககிறது. இதற்கு முழுப் பொறுப்பு பிரபாகரனே,

இனியாவது பிரபாகரன் உணர்வாரா?

**ஆனந்தராம் குமார்**

**கன்னியாகுமரி**

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் (LTTE) முதுகில் குத்தும் அவலச் செயல் நம்மை தலைகுனிய வைக்கிறது. கூட இருந்தே குரல் வளையை நெரிக்கும் LTTEன் செயல்களை நோக்கும் போது அவர்கள் தான் எதிர்ப்புரட்சியாளர்கள் என்பது புலனுகிறது.

தரணியில் தமிழர்கட்கு உரிமையுடையதாய் தமிழ் ஈழம் அமைத்திட ஆயுதப் போரை-தேர்த்தெடுத்தோம்; அணிவகுத்தோம்; குறிக்கோளை அடைய நெருங்கி வந்தோம். சர்வாதிகார சதிக்கும் பல் சதி செய்தது. சண்டையிலே பகைவரின் தலையை உருட்டிய தமிழரின் நம்பிக்கை ஒளியை தலைவர் சிறீ சபாரத்தினத்தை தட்டிப் பறித்தனர் உடனிருந்து குறிபறிக்கும் எட்டப்பர்கள். சதியை மூடிமறைத்து சதிராட்டம ஆடி ஈழத்தில் தான் மட்டும் சர்வாதிகார ஆட்சி செலுத்த ''உண்மை விளக்கம்'' வெளியிட்டு ஊரை ஏமாற்றுகிருர்கள்.

தங்களதுவிடியல் கதிர் 12 படித்தேன். அதில் பிரபாகரனின் முகமூடி கிழிக்கப்பட்டுள்ளது பாலசிங்கம் ஒரு புல்லுருவி என்பதையும் தெட்டத் தெளிவாக உணர்த்தினீர்கள் எனது பள்ளித் தோழர்களும் விடியல் படித்தார்கள் பிரபாகரன் இப்படி ஒரு மிருகமா என்று கேட்கிருர்கள்.

செயலதிபர் செல்வம் அவர்கட்கு எமது புரட்சிகர வாழ்த்துக்கள்.

**தண்டபாணி**

**காவேரிப்பாக்கம்**

ஈழம் தலை சிறந்த தலைவனை இழந்துவிட்டது. அடக்கத்திற்கும் அமைதிக்கும்-பெயர் போன சிறீ சபாரத்தினம் அவர்கள் மிருகத்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்டதை வன்மையாக கண்டிக்கிறேம். சிறீ சபாவை கொன்றதன் மூலம் LTTEயினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

முன்பு PLOT உடன் மோதல்-சமீபத்தில் EPRLEவுடன் மோதல்-தற்போது TELOவுடன் மோதல். இவர்கள் சக இயங்களை அழித்து விடுவதன் மூலம உலக அரங்கில் LTTE-பெரிய இயக்கம் என்பதை வெளிக்காட்ட ''மார்க்கெட்'' தேடியலைகிருர்கள்.

LTTE இனுல் படுகொலை செய்யப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட போராளிகளுக்கு வீர அஞ்சலியை செலுத்துகிறேம்.

சிறீ சபா வழியில் தொடர்ந்து போராடுங்கள்.

**சந்திரமோகன்**

**ஊற்றங்கரை**

விடியல் இதழ் கதிர் 12 அராஜகவாதிகளை வெகுமக்கள் மத்தியில் அம்பலப்படுத்தி, புரட்சிகர சக்திகளை அடையாளம் காட்டும் என்பதில் ஐயமில்லை. பாலசிங்கம், பிரபாகரன் போன்ற கும்பல்களின் ஈழ பாசிஸ வெறிச் செயல்களை அம்பலப்படுத்தும் பணியை-முறியடிக்கும் செயலை ஏகாதிபத்திய எதிர்ப்பு ஈழ விடுதலைப் போராட்டத்தோடு இணைத்து முன்னெடுத்துச் செல்வதே தோழர் சிறீ சபாரத்தினத்திற்கு டெலோ செலுத்தும் மிக உயர்ந்த அஞ்சலியாகும். அராஜக கும்பல்களால நிச்சயமாக ஈழ விடுதலைப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்து செல்ல முடியாது. ஏனெனில், மக்கள் சக்தியை என்றைக்குமே அவர்கள் நம்புவதில்லை, ஆயுதமே அவர்களுக்கு அனைத்தும். கட்சி துப்பாக்கி மீது ஆணை செலுத்த வேண்டும். ஆனுல் துப்பாக்கி கட்சி மீது ஆணை செலுத்துவதை நாம ஒரு போதும் அனுமதிக்க முடியாது என்ற தோழர் மா-சே-துங் சிந்தனையை வைத்து செயல்படும் மக்களைச் சார்ந்த மக்களை மட்டுமே சார்ந்த ஆயுதப் போராட்டமே ஈழ விடுதலையை வென்றெடுக்கும். பல தவருன பத்திரிகைச் செய்திகளை படித்து டெலோ அழிந்து விட்டதாக பலர் நினைக்கக் கூடும். இந்தச் செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என்பதை நிரூபிக்கும் வகையில் ஜூன் விடியல் அமைந்திருந்தது. தொடரும் உங்கள்-ஈழத் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் வெற்றி பெற எமது புரட்சிகர வாழ்த்துக்கள்.

**துரைமுருகானந்தம்**

**மானு மதுரை**


தலைவர் சிறீ சபாரத்தினம விடுதலைப் போலிகளால் படுகொலை செய்யப்பட்டார்-என்ற செய்தி கேட்டு நாங்கள் துயரததிற்கு உள்ளானேம். கடந்த 04-05-1986-ல் சிவகங்கை-மானு மதுரை மக்கள் கருஞ் சின்னம் அணிந்து தங்கள் அஞ்சலியை செலுத்தினுர்கள். தலைவரின் படுகொலையை கண்டித்து கீழ்வரும் வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகளை நாங்கள் வெளியிட்டோம்.


''விடுதலைப் போ(பு)லிகளால் படுகொலை செய்யப்பட்ட டெலோ தலைவர் மானமிகு சிறீ சபாரத்தினம் அவர்கட்கும் டெலோட்டுகளுக்கும் எங்கள் அஞ்சலியை செலுத்துகிறேம் பிரபாகரனை தமிழ் மக்களே புறக்கணியுங்கள்''


**சுப்பிரமணியம்**

**மணலி**

இராணுவத்தின் மூலமாகவே தீர்வு காண்பேன் என்கிருர் ஜெயவர்த்தன இந்த நிலையில், தலைவர் சிறீ சபாரத்தினத்தை கொலை



www.tamilarangam.net







செய்தது தானே-தனது அடுத்த கையை-வெட்டிக் கொண்டது போலாகும். எனவே சிறி சபா கொலை செய்யப்பட்டதையிட்டு மிகவும் வேதனையில் உள்ளோம் காரணம் எதுவாக இருப்பினும் சிறி சபா கொலையை வன்மையாக கண்டிக்கிறோம்.

இரா. பாஸ்கர்

இராஜபாளையம்

சிறீ அண்ணா என்று அன்பாக அழைக்கப்பட்ட தலைவர் சிறி சபாரத்தினத்தின் மறைவு மிகுந்த வேதனையை அளிக்கிறது. அவருக்கு நம் அஞ்சலிகள் உரித்தாகட்டும். டெலோவை பொறுத்த வரையில் தலைவரை இழப்பதென்பது ஒரு புதிய நிகழ்ச்சி அன்று. ஏற்கனவே தங்கத்துரை-குட்டிமணி-ஜெகன்... இன்னும் தலைமைப் பொறுப்பில் இருந்த அனைவரையும் கிட்டதட்ட அடியோடு இழந்த விட்ட நிலையிலும், டெலோ போராளிகளின் மன உறுதியால் டெலோ பன்மடங்கு வளர்ந்தது. தலைமைப் பொறுப்பிற்கு தகுதியுள்ள எத்தனையோ தோழர்கள் கிடைப்பார்கள். அன்று குட்டிமணி சொன்னதை நினைவு கூருவோம்; ''என்னைத் தூக்கிவிடுவதன் மூலம் ஆயிரம் குட்டிமணிகள் உதயமாவார்கள். அவர்கள் தமிழ் ஈழத்தின் இறைமையை மீட்டெடுக்கக் கூடிய தீரம் மிக்கவர்களாக இருப்பார்கள். ஒரு சிறீ அண்ணாவின் மறைவு பல்லாயிரம்-சிறீ அண்ணாக்களை உருவாக்குவது நிச்சயம். அவர்கள் சிறீ அண்ணாவின் புரட்சிப் பாதையை நன்குணர்ந்து தெளிவான நோக்கோடு செயல்படுவோராக இருப்பார்கள்.

இப்போது நாம் செய்ய வேண்டியது என்ன? கடந்தகால நிகழ்வுகளையும்-அதற்கான காரணங்களையும் ஆராய்ந்து அதற்கேற்ப நம்மையும், நமது பாதையையும் சரியாக அமைத்து புரட்சிப் பாதையில் தொடர்ந்து முன்னேற வேண்டும்.

அகூதா

ஆமணக்குருத்தம்

தலைவர் சிறீ சபாரத்தினத்திற்கும், அவருடன் வீரமரணம் அடைந்த நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்களுக்கும் எமது வீர வணக்கம் தலைவரை இழந்து விட்டோம் என்று யாரும் கலங்காதீர்கள். அவர் உங்களோடு தான் இருக்கிறார் அவரது பணியை தொடர்ந்து செய்யுங்கள்.

உலக வரலாற்றிலே எவரும் ஏற்ப்படுத்தாத கறையை உருவாக்கிய LTTEயினரை ஈழ வரலாற்றிலிருந்து தூக்கியெறியுங்கள். உங்கள் பணி தொடரட்டும். எங்கள் ஆதரவுகள்-என்றும் டெலோவுக்கே.

இரா மதிவாணன்

பல்லாவரம்

தமிழ் ஈழ விடுதலை இயக்கத் தலைவர் சிறீ சபாரத்தினம் கொடூரமான முறையில் பிரபாகரன் குழுவினரால் படுகொலை செய்யப்பட்ட செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தோம் LTTE என்ற ஊர்க்காலிகளின் முக மூடியை கிழியுங்கள். போலி முகங்களை இனம் காட்டுங்கள். சிறீ சபாவின்-பாதையில் தொடர்ந்து முன்னேறி விடுதலையை வென்றெடுங்கள். எங்கள் ஆதரவுகள் என்றும் உங்களுக்கே.

M. மாயவன்

அகதிகள் முகாம்

கடலூர்

தலைவர். சிறீ சபாரத்தினம் அவர்களின் அஞ்சலி சுவரொட்டியை பார்த்ததும் தாய்மார்கள் அழ ஆரம்பித்து விட்டார்கள், எமக்கு அன்றைய நாட்கள் முழுவதும் துக்க தினமாகவே இருந்தது' எம்மால முடிந்ததும் அது ஒன்று தான். நாங்கள் அனைவரும் தலைவர் சிறீ சபாவுக்கு அஞ்சலி செலுத்தினோம். அவருடன் செயல்பட்ட தோழர்கள் எம்மைக் கைவிடமாட்டார்கள் என்ற பூரண நம்பிக்கை எமக்கு உள்ளது. ஆகையால் தலைவர் இருக்கும் போது எப்படி செயல்பட்டீர்களோ அவ்வாறு தற்போதும் செயல்பட்டு விடுதலையை விரைவில் வென்றெடுங்கள்.

இளங்கோ

பெரியகுளம்

கசப்பான கடந்த கால சம்பவங்களை அறிந்து மிகவும் மனம் வருந்துகிறேன். ஈழ வரலாற்றில் ஒரு ஆதிக்க வெறியன் பிரபாகரன் உருவாகி வருவது ஈழத் தமிழினத்திற்கே மாபெரும்-அபாயமாகும். மரியாதைக்குரிய தலைவர் சிறீ சபாவின் மறைவுக்கு என்னுடைய செவ்வணக்கங்களை தெரிவித்துக் கொள்கிறேன்

விடியல் கதிர் 12-ல் வெளியிட்ட 'பாலசிங்கம்-பிரபாகரன் ஒடுக்கப்பட்ட மக்களின் துரோகிகள்'' என்ற கட்டுரை பல அரிய விடயங்களை நன்கு உணர்த்தியது. இது போன்ற கட்டுரைகளை தொடர்ந்து வெளியிட்டு ஆதிக்க வெறியன் பிரபாகரனின் முக மூடியை கிழியுங்கள்.

வெளிச்சம்

கோவை

தேசவிடுதலை எந்த தனி மனிதனுக்கும் சொத்தில்லை; குத்தகையில்லை என்பதை மட்டும் ஈழ மக்கள் உணர்வார்கள். ''சமூக பாசிசத்திற்கான கூறுகள் LTTE இயக்கத்தினுள் உண்டு. ஏனெனில் அவர்களின் அரசியல் தலைமையின் வர்க்க வரலாற்று பின்னணி அவ்வாறானது, தோழர் சிறீ சபாவுக்கு எமது வீர வணக்கம்.







கேளுங்கள்!

டெலோ வின்

"தமிழ் ஈழ விடுதலை வானொலி"

ஞாயிறுதோறும் பிற்பகல்
3.30 - 4.00 மணிவரை
41 m சிற்றலை வரிசையில்

## தமிழ் நாட்டில் LTTE...

13-06-1986 காலை 7-00 மணி முதல் மாலை 6-00 மணி வரை காரைநகரில்-கப்பல்கள் மூலம் பல கோடி. ரூபா பெறுமதியான ஆயுதங்கள் இறக்கப்பட்டன. இவ் ஆயுதங்கள் கோட்டை முகாமிற்கும், புதிய மண்டைதீவு முகாமிற்கும் எடுத்துச் செல்லப்பட்டன,

இதேதினம், வல்வெட்டித்துறை இராணுவ முகாமிற்கு கடற்படைக் கப்பல்கள் மூலம் கறுப்பு உடையணிந்த 100 இராணுவத்தினர் வந்தடைந்தனர்.

15, 16-06-1986 ஆகிய தினங்களில் 1000 இராணுவத்தினர் யாழ்ப்பாணம் வந்தடைந்தனர் இவர்கள் தொண்டமானாறு-பலாலி ஆகிய முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர்.

16-06-1986ல் வவுனியாவில் இருந்து ஓமந்தைக்கு 1000 இராணுவத்தினர் கால் நடையாக வந்து சேர்ந்தனர்.

17-06-1986ல் காரைநகர் கடற்படைத் தளத்திற்கு கப்பல்கள் மூலம் 100 இராணுவத்தினர் வந்து சேர்ந்தனர் இதே தினம், அதிகாலை 50 இராணுவத்தினர் வாகனங்கள் மூலம் காங்கேசன் துறை முகாமை வந்தடைந்தனர்.

நிலமை இவ்வாறு இருக்க, LTTE யினர் தமிழ் நாட்டில் போலிப் பிரச்சாரங்களை மேற்க்கொண்டு, பிரபாகரன் தமது சகாக்களுடன் உல்லாச வாழ்வு நடாத்த முனைகிறார்.

LTTE யினருடன் கைகோர்த்து செயல்படும் சிறீ லங்கா அரசு இன்று கும்மாளம் போட்டு தனது பலத்தை பெருக்கலாம். எம் மக்களை மிரட்டலாம். ஆனால் இவற்றுக்கு விரைவில் முற்றுப் புள்ளி வைக்கப்படும் இராணுவத்தினர் ஓடோட விரட்டப்படுவர். எமது மக்களது! ஆட்சி நிறுவப் படும்.

எமது இலக்கு சிறீலங்கா அரசே!

## சவால் விடுக்கிறார் ஜெயவர்த்தன

கொழும்பில் இருந்து 200 K.m. தொலைவில் உள்ள ஹிங்குரகோடா என்ற இடத்தில் கடந்த 24-06-1986ல் பேசிய ஜெயவர்த்தனா இந்தியாவை கடுமையாக தாக்கினார்.

பாகிஸ்தானிடம் இருந்தும் இஸ்ரேலிடம் இருந்தும் ஆயுதங்களை இலங்கை வாங்குகிறது என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சிவசங்கர் பேசியதாக பத்திரிகைகளில் செய்தி வந்திருந்ததை பார்த்தேன் ஆமாம்; இது உண்மைதான். இதை மறைக்க வேண்டிய அவசியமில்லை. எந்தெந்த நாடுகள் ஆயுதங்களை விற்க தயாராக இருக்கிறதோ அங்கெல்லாம் இருந்து ஆயுதங்களை வாங்குவோம்.

எந்தெந்த நாடுகளிடம் இருந்து விடுதலைப் புலிகள் ஆயுதங்களை வாங்குகிறார்கள் எங்கெங்கு அவர்கள் ஆயுதப் பயிற்சி பெறுகிறார்கள்; இப்படி பயிற்சி பெற்ற பின்னர் எந்த நாட்டிலிருந்து வருகிறார்கள் என்ற விவரங்களையெல்லாம் அமைச்சர் சிவசங்கர் தெரிவிக்க வேண்டும்.

இதற்கு மத்திய வெளிவிவகார அமைச்சர் சிவசங்கரிடம் இருந்து பதில் வரும் என்று நம்புகிறேன்.

இவ்வாறு அக்கூட்டத்தில் ஜெயவர்த்தனா பேசினார்.

www.tamilarangam.net

# தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு மனிதாபிமானம் பூச்சியம்



# இரத்த வெறிதான் அவர்களது இலட்சியம்

புலிகள் (LTTE) போகிற போக்கில் விரைவில் நிக்கரகுவா எதிர்ப் புரட்சியாளர்கள், கம்பூச்சிய எதிர்ப்புரட்சியாளர்கள், அங்கோலா எதிர்ப்புரட்சியாளர்கள் இவர்களின் எதிர்ப்புரட்சி நடவடிக்கைக்கு நிதிவழங்கும் வரிசையில் புலிகளுக்கும் இராணுவ மற்றும் நிதி உதவிகளை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நீகன் அமெரிக்க காங்கிரசில் சமர்ப்பிக்கலாம். இவ் உதவிகள் ஜெயவர்த்தனவுக்கு எதிராக அல்ல சக விடுதலை இயக்கங்களை அழித்து அதன் மூலம் தமிழ் ஈழக்கோரிக்கையை அழித்துவிடலாம் என்று விளக்கமளிக்கலாம். ஏனெனில் ஜெயவர்த்தனவுக்கு ஆயுதம் கொடுப்பதைவிட புலிகளுக்கு கொடுப்பதன் மூலம் போராளிகளை இலகுவாக கொல்லலாம் என்பதை புலிகள் தனது எஜமானர்களுக்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள்.

தமிழ் பேசும் மக்களின் முழுமையான விடுதலையை நிதர்சனமாக்க, அதற்கான செயற்பாடுகளில் முன்னின்று ஜெயவர்த்தன அரசுக்கு எதிரான தாக்குதல்களை டெலோ அமைப்பானது தொடுத்து வந்த வேளையில், சிறிலங்கா அரசுக்கு சாதகமாக தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்தும் நோக்குடன் எதிர்ப் புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பானது (LTTE) வெறிபிடித்து அலையும் சிறிலங்கா இராணுவத்தைப் போன்று டெலோ தலைவரும், ENLF தலைவர்களில் ஒருவருமான சிறி சபாரத்தினத்தையும் - டெலோ போராளிகளையும் - பொது மக்களையும் கொன்று குவித்தமை LTTE யின் அராஜக செயல்களை அம்பலப்படுத்தியதோடு ஏகாதிபத்தியத்தின் செல்லப் பிள்ளைகளான பிரபாகரனினதும் - ஜெயவர்த்தனவினதும் கூட்டுச் சதியையும் வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளது.

ஜெயவர்த்தனவின் கொள்கையிலிருந்து LTTE ன் பிற்போக்கு உறுப்பினர்கள் எந்த விதத்திலும் மாறுபாடு அற்றவர்களாய் தமிழ் ஈழப் பகுதியில் ஏகாதிபத்தியத்திற்கு துணை போகும் தமிழ் இனத் துரோகிகளாய் அதி, அதி தீவிரமாக செயலாற்றி வருகின்றனர்.

ஒடுக்குமுறைக் கொடுமைகளின் அனுபவங்கள் புரட்சிகர சிந்தனைகளால் அழுத்தம் பெறுகின்ற போது ஆயுதப் போராட்ட முன்னெடுப்புகளை கொண்ட முற்போக்கு சக்திகள் பரிணமிக்கின்றன.

அதேவேளை, எதிர்ப்புரட்சி சக்திகளும் ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகளினால் போலி முற்போக்கு சக்திகளாக அதாவது தமிழ் ஈழத்திலுள்ள LTTE அமைப்பு போன்று தோற்றுவிக்கப்படுகின்றன.

தமிழ் ஈழத்தில் பரிணமிக்கும் எந்தவொரு முற்போக்கு சக்திகளையும் செயல்படவிடாது அழித்தொழிக்கும் திட்டங்களுடன், ஏகாதிபத்தியத்தின் உந்துதல் மூலமாக கட்டி வளர்க்கப்பட்ட LTTE அமைப்பானது தனது உண்மையான சொரூபங்களை மறைமுகமாகவே வைத்துக் கொள்ளும்.

தமிழ் ஈழத்தில் முதல் பூத்த புரட்சி மலர்களை வெலிக்கடை சிறையில் படுகொலை செய்த ஜெயவர்த்தனவின் இனவெறிக் குண்டர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்கள் இந்த LTTE யினர். ஜெயவர்த்தனவை ஆத்திரமூட்டி டெலோவின் மூத்த தலைவர்களை கொலை செய்கின்ற ஒரே நோக்கத்திற்காகவே LTTE யினர் 1983ல் 13 இராணுவத்தினர் மேல் தாக்குதலை மேறக் கொண்டனர். நாம் தலைவர்களை மீட்கப் போகிறோம். இதற்கு சிறிலங்கா அரசை சிறிது உறங்கு நிலைக்கு கொண்டுவர வேண்டும். ஆதலால் சிறிலங்கா அரசுக்கு எதிரான எத்தகைய நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டாம் என டெலோ பிரபாகரனுக்கு எத்தனையோ தடவைகள் அறிவுறுத்தியது. ஆனால் பிரபாகரன் ஒரு பிரிட்டிஷ் பிரஜை பாலசிங்கத்தின் எதிர்ப்புரட்சி திட்டங்களுக்கு பலியாகி, இனக் கலவரத்தை தோற்றுவித்து தலைவர்களை கொன்று தீர்த்தான்.

தமிழ் ஈழ மக்கள் இந்த சோகத்தில் இருந்து மீள்வதற்குள், "டெலோ அமைப்பு முற்றாக அழிந்துவிட்டது. டெலோஸ்டுக்கள் எல்லோரும் வெலிக்கடையில் கொல்லப்பட்டு விட்டனர்" என ஊர் ஊராக துள்ளிக் குதித்து பிரச்சாரம் செய்தனர் LTTEயினர்.

ஆனால், பிரபாகரினதும் - ஜெயவர்த்தனவினதும் எதிர்பார்பிற்கு முற்றிலும் மாறாக டெலோ அமைப்பானது தலைவர் சிறி சபாரத்தினத்தின் சிறப்பான வழி நடாத்தலோடு, தமிழ் ஈழப் பகுதிகளில் சிறிலங்கா அரசுக்கு எதிரான பலமான தாக்குதல்களை தொடுக்க தயாரான வேளை, இரத்த வெறியும் - பதவி மோகமும் கொண்ட LTTE யினர், ஏகாதிபத்தியத்தின் ஆலோசனையின் பேரில் டெலோவைஉடைத்தெறிய திட்டமிட்டனர். எமது அமைப்பினுள் உட்கட்சி முரண்பாடுகளை வளர்க்க பொறுக்கியெடுக்கப்பட்ட சில டெலோ உறுப்பினர்கள் மூலம் முனைந்தனர். LTTE யினர். தொடர்ந்து தலைவர் சிறி சபாரத்தினத்தை கடத்தி டெலோவின் புரட்சித் திட்டங்களை தவிடு பொடியாக்குவதற்கு LTTE யினர் எடுத்துக் கொண்ட சகல முயற்சிகளும் டெலோவினால் முறியடிக்கப்பட்டன.

விடுதலை இயக்கங்களிடையே இணைவு ஏற்படுத்தப்படுவதினால் விடுதலைப் போராட்டத்தை மேலும் வலுப்படுத்த முடியும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்ட தலைவர் சிறிசபாரத்தினம் அதற்கு செயல் வடிவம் கொடுத்த போது TELO - EPRLF - EROS ஆகியவை தமக்கிடையேயான வேறுபாடுகளை தவிர்த்து ஒழுங்கான அரசியல் வேலைத்திட்டங்களை ஒருமித்து நிறைவேற்றும் ENLF அமைப்பு உருவாகியது.

LTTE யினர் தொடர்ந்து தவறுகள் செய்ய மாட்டார்கள், அவர்களும் விடுதலைப் போராளிகள் தானே. ஆதலால் அவர்களையும் அரவணைத்து ஐக்கிய முன்னனியை பலப்படுத்த வேண்டும் என்ற நோக்கில், ENLF கூட்டு அமைப்புடன் LTTE அமைப்பை இணைந்து கொள்ளும்படி அழைப்பு விடுத்த போது அதை விரும்பாது ஒதுங்கிக் கொண்டதிலிருந்தே LTTEன் விடுதலை உணர்வு பயனற்றது என்பதும், அவர்கள் தனித்துவம் பேணும் சுயநலக் கும்பல் என்பதும் வெளிச்சத்திற்கு வந்தது.

ஆனால் LTTE யினர் தங்களது நடவடிக்கைகள் வெளிப்பட்டு விடுமோ என்ற பயத்தில் ENLF உருவாக்கப்பட்டு குறிப்பிட்ட காலத்திற்கு பின்னர் திடீரென்று சேர்ந்து கொண்டனர். இவர்கள் திடீரென ENLFல் சேர்ந்து கொண்டமை ஒரு சதித்திட்டம் என்பது இப்போதுதான் புலனாகியுள்ளது. இதனால் LTTE யினரின் விடயத்தில் மிகவும் உன்னிப்பாக நாம் நடந்து கொள்ள வேண்டியிருந்தது

இருந்தும் கூட, ENLF அமைப்பில் அங்கம் வகிக்கும் இயக்கங்களுள் LTTE தான் முனைப்பான செயல்ப்பாடுடையது என்றும், LTTE இல்லை என்றால் ENLE கூட்டு அமைடபானது எதுவித பிரயோசனமும் அற்றது என்று, தம்மை முதன்மைப்படுத்தி அறிக்கைகள் வெளியிட்ட LTTE யினரின் தனிப் போக்கினை தமிழ் மக்கள் அறியாமல் இல்லை அதுமட்டுமல்ல, ENLF உடன் LTTE யினர் சேர்ந்து கொண்ட பிற்பாடே தமிழ் ஈழப் பிரதேசம் எங்கும் கொள்ளை, கொலைச் சம்பவங்களில் LTTE யினர் அதிகமாக ஈடுபட்டனர். LTTE யினர் ENLF அமைப்பில் சேர்ந்து கொண்டமையால், அவர்களின் செயற்பாடுகளை எதிர்த்து விமர்சிக்க ENLF அமைப்பிலுள்ள ஏனைய அமைப்புக்கள் முன்வராது என்கின்ற தப்பான முடிவுதான் காரணமாகயிருந்தது. ஆனால், டெலோ LTTE யின் பிழையான செய்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. LTTE யினரால் மேற்கொள்ளப்பட்ட ஊர்காவற்துறை வீட்டுக்கொள்ளை, நல்லூர்கந்தசாமி கோயில் கொள்ளை முயற்சி ஆகியன டெலோவினால் கையும், களவுமாகப் பிடிக்கப்பட்டன. அதுமட்டுமல்ல, பெருமான் கோவில் கொள்ளையை செய்தவர்கள் தமக்குத் தெரியும் என LTTEயினர் நாடகமாடியபோது, அதனை அம்பலப்படுத்துமாறு டெலோ பகிரங்க வேண்டுகோள் விடுத்த போது LTTE யினர் மௌனமாகி விட்டதை தமிழ் ஈழ மக்கள் நன்கு அறிவார்கள்.

இவ்வாறாக, மக்கள் விரோதப் போக்கில ஈடுபட்ட LTTE யினர் ENLF அமைப்பிலிருந்து வெளியேற்றிவிட ஏனைய அமைப்புகள் விரும்பினாலும் இயக்கங்களின் ஒற்றுமையை விரும்பும் தமிழ் மக்கள் ENLFல் ஏற்படும் உடைவினை தவறுதலாகப் புரிந்து கொண்டு, கூட்டு அமைப்பின்

புலிகளின் (LTTE) கோரத்தனங்களை நேரில் கண்ட இந்தியாவின் PTI நிருபரின் தகவலின்படி 12க்கும் 14 வயதுக்கும் இடைப்பட்ட இளம் போராளிகள் உயிருடனே புலிகளால் தீமூட்டி எரிக்கப்பட்டனர். இவர்களை பார்த்து புலிகள் கைதட்டி நாடகமாடினர். தலைவர் சிறி சபாரத்தினத்தை கொன்ற செய்தியை புலிகள் மகிழ்ச்சி கலவரத்துடன் ஒலிபெருக்கி மூலம் செய்தியாக தெரிவித்தனர். இக் கோரக் காட்சிகளை கண்ட பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பலர் சித்த சுவாதீனம் அற்றிருக்கிறார்கள். புலிகளின் இச் செயல்கள் குறித்து PTI நிருபருக்கு கருத்து தெரிவித்த வைத்திய நிபுணர் இச் செயல்களை இவர்கள் சுய நினைவுடன் மேற்க்கொண்டிருக்க முடியாதென்றும் போதை வஸ்துக்களை அருந்திய பின்னரே செய்திருக்கிறார்கள் என்றும் தெரிவித்தார்.

www.tamilarangam.net

**பிரபாகரன் அவர்கள் TELA தலைவர் ஒபறேய் தேவனை சுட்டுவிட்டு LTTE இயக்கத்தின் பெயரைச் சொல்லி காசு வாங்கியதாக குற்றம் சாட்டினர். ஆனால் டெலோ இயக்கத்தின் காசையும், ஆயுதங்களையும் பிரபாகரன் மோசடி செய்தே செத்துப்போன LTTE இயக்கத்தை வளர்த்தவர். அவைகளை இன்றுவரை திருப்பித் தரவில்லை.**

மீதும், தமிழ் ஈழத்தின் மீதும் அவர்களுக்கிருக்கும் நம்பிக்கை தளர்ந்து விடக்கூடாது என்பதற்காக பொறுமையுடன் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது

இருந்தாலும், LTTE யினரின் எதிரான போக்குகளை அவ்வப்போது ENLF கூட்டு அமைப்பு கண்டிக்கத்தவறவில்லை.

LTTE யினரின் ஒழுங்கற்ற போக்கினை காலப் போக்கில் நாங்கள் நேரில் விமர்ச்சித்ததோடு அதற்கான பதில்களை LTTE யினரால் தர முடியாது போகவே படிப்படியாக ENLF அமைப்பின் கூட்டத்தொடரில் பங்குபற்றுவதை குறைததுக் கொண்டு பின்னர் முழுமையாகவே நிறுத்திக் கொண்டனர் LTTE யினர்.

LTTE யினரின் ஒழுங்கற்ற போக்குகளை டெலோ அமைப்பானது முழுமையாக கண்டித்து LTTE யினரின் ஒவ்வொரு எதிர் நடவடிக்கைகளுக்கும் பதிலடி கொடுத்து வந்துள்ளமை, LTTE யினரின் வயிற்றெரிச்சலைக் கிளப்பி விட்டிருக்க வேண்டும் இதனால் தான் டெலோ அமைப்பை உடைத்து இருபிரிவுகளை உண்டு பண்ணி LTTEயினரின் எதிர்ப்புரட்சிகெதிராக தடைக்கல்லாக நிற்கும் டெலோவை சிதைத்து விட வேண்டும் என்ற சிந்தனையிலதான் எப்பொழுதும் LTTE யினர் இருந்தனர். அதற்கான சந்தர்ப்பங்களை LTTE யினர் எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளை தான் டெலோ அமைப்பிற்குள் சில விசமசகதிகளின் போக்குகளால் டெலோ போராளி தாஸ் பிரச்சனை தலை தூக்கியது. தாஸ் டெலோவின் கட்டுப்பாடுகளை மீறி நடந்து கொண்டமை டெலோவின் நல் எண்ண முயற்சிகளுக்கு தடையாக அமைந்து விட்டது.

தாஸ் பிரச்சனையை தமக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்ட LTTE யினர் டெலோவிற்கெதிரான, அதே நேரத்தில் தாஸ் இற்கு ஆதரவான துண்டுப் பிரசுரங்களை ஈழத்திலும் வெளி நாடுகளிலும் விநியோகம் செய்தனர் டெலோவிற்குள் உருவான உள்முரண்பாடுகளை நியாயமற்ற முறையில் பொய்யான விடயங்களைச் சேர்த்து விளம்பரப்படுத்தினர் LTTE யினர்

போராட்டத்தின் முனைப்பான வேலைப்பாடுகளிலீடு பட்டிருந்த டெலோ அமைப்பானது தமிழீழப் பகுதிகள் எங்கும் பரவலான பெரிய தாக்குதல்களை சிறிலங்கா அரசுக்கெதிராகச் செய்து முடிக்க திட்டமிட்டுக் கொண்டிருந்தது. இதனை அறிந்து கொண்ட LTTEயினர் இனியும பொறுத்துக் கொள்ள முடியாது, டெலோ அமைப்பின் மீது மூர்க்கத்தனமான யுத்தத்தை பயங்கரமாக கட்டவிழ்த்து விட எண்ணினர்.

இதற்கான ஆரம்ப நடவடிக்கையாக டெலோ இயக்கப் போராளிகள் நான்கு பேரை LTTE யினர் கடத்தி கொடூரமான சித்திரவதையின் பின்னர் இருவரை விடுதலை செய்தனர்.

எமது இரு போராளிகளையும மீட்பதற்காக LTTE போராளிகள் இருவரை நாம் கைது செய்து ஒரு மணி நேர இடைவெளியினுள் ஒரே நேரத்தில் தமிழீழப் பிரதேசங்களிலுள்ள டெலோ போராளிகளின் முகாம்கள் LTTE யினரால் ஏகாதிபத்திடமிருந்து பெற்றுக் கொண்ட நவீன ஆயுதங்களால் தாக்கப்பட்டன.

டெலோவின் தகவல் தொடர்புகள் யாவும் அற்றுப்போன நிலையில் மிருகத்தனமாக செயல்பட்ட LTTE யினர் டெலோ தலைவர் சிறிசபாரத்தினத்தையும், நூற்றுக்கும் அதிகமான போராளிகளையும், ஆதரவு கொடுத்து வந்த பொது மக்களையும் ஈவிரக்கமின்றி சுட்டுத் தள்ளினர்.

எதிர்ப்புரட்சியாளர்களுக்கு மனிதாபிமானம் பூச்சியம் இரத்த வெறிதான் அவர்களது இலட்சியம். LTTE யினர் இவைகளை நிரூபித்து விட்டார்கள். LTTEயினர் யார் என்பதை அடையாளம் காட்டிக்கொண்டார்கள். பிரபாகரன் ஜெயவர்த்தனா கூட்டுச்சதியின் காரணமாக சிறிலங்கா அரசின் விமானத் தாக்குதல் LTTE யினருக்கு துணை நின்றது.

LTTEயினரும், சிறிலங்கா அரசும் ஒருங்கிணைந்து தமிழ்ப் பகுதிகளில் பொதுமக்களையும், போராளிகளையும் கொன்று குவித்து வருவதிலிருந்து LTTE யினரும், சிறிலங்கா அரசும் ஏகாதிபத்தியத்தின் கைக் கூலிகளாகயிருப்பதை தமிழீழ மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

தவறுகளை தாமே செய்து கொண்டதோடல்லாமல். தனிசதுவம் தேடி யாழ்ப்பாணத்தை மீட்டெடுத்த மாவீரன் என்று விளம்பரப்படுத்திக்கொள்ளும் தலைமைத்துவம் உள்ள LTTEயினர் புரட்சியாளர்கள் அல்ல. ஏகாதிபத்தியத்தின் காவலர்கள்.

ஏகாதிபத்தியத்தின் புல்லுருவிகளை களைத்தெறிந்து புதிய செயலதிபர் செல்வத்தின் செழுமையான செயல் ஊக்கத்தோடு செதுக்கப்படும் தமிழ் ஈழம் நிச்சயம் வெகுதூரத்தில்லை.



# டெலோ செயலதிபர் செல்வம்

# புலிகளின் மற்றுமோர் வெறியாட்டம் ரூபன் கொலை

கப்புது நெல்லியடியைச் சேர்ந்த ரூபன் எனப்படும் தயாநிதி என்பவரை தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் (LTTE) வேதாரண்யத்தில் வைத்து இரும்புக் கம்பிகளால் தாக்கி, தமது வானில் ஏற்றி கொலைக்களம் கொண்டு சென்றுள்ளனர். ரூபன் LTTE இயக்கத்திற்கு நான்கு வருடங்களாக உதவி வந்தவர். நெல்லியடி பிரச்சார வேலைகளில் கடுமையாக உழைத்தவர். அக்கிராமத்திலிருந்து பல போராளிகள் LTTE இயக்கத்தில் சேர காரணமாக இருந்தவர். 1983-ம் ஆண்டு இயக்கத்தின் முழுநேர உறுப்பினராகி பயிற்சிக்காக இந்தியா வந்தார். LTTE இயக்கத்தின் கொள்கை விளக்கங்கள் பிரசுரங்கள், பேட்டிகளுக்கும் அதன் நடைமுறைக்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது எனப்படிப்படியாக கண்டு கொண்டார் மக்களின் உண்மையான விடுதலையை நேசித்த இவருக்கு இயக்கத் தலைமையின் சர்வாதிகார போக்கும், டாம்பீக வாழ்க்கையும் அதிருப்தியை கொடுத்தன இயககத்திற்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்த நீண்டகால உறுப்பினர்களின் வெளியேற்றம்-இயக்கத் தலைவர் தமது உறவினர்கள், நண்பர்கள், எடுபிடிகள் கொண்ட குண்டர் படையையும், உளவுப் படையையும் வைத்திருத்தல், போலியாகப் பிரசுரங்களில் மாத திரம் மத்திய குழுவினால் வெளியிடப்பட்டது என அச்சேற்றி விட்டு தலைமையும் அதன் எடுபிடிகளும் சகல அதிகாரங்களையும் வைத்துக் கொண்டு துஷபிரயோகம் செய்தல், விமர்சனம் செய்பவர்களை கொலை செய்தல்; ஆகிய இன்னும் பல LTTEன் ஜனநாயகவிரோத, பாசிசப் போக்குகளைக் கண்டு அதிருப்தி கொண்டார் இவர். ரூபன் இருந்த முகாமில் அவரும், அவரையொத்த கருத்துடைய தோழர்களும் இயக்கத்தின் தவறான போக்குகளை விமர்சித்தனர் முகாமில் இருந்த போராளிகள் உண்மை நிலைமையை உணர்ந்தமையால் இவரிருந்த முகாம் ஆட்டங்காணத் தொடங்கியது. இவர்களின் விமர்சனங்களுக்குத் தலைமை பதிலளிக்க தவறியது. ஆனால் இவர்களின் கேள்விகள். விமர்சனங்கள் நியாயமானவையே என்ற உணர்வு முகாமினுள் பரவலாகக் காணப்பட்டது, இவ்விமர்சனங்கள் காரணமாக ரூபனுடன் சேர்த்து 16 தோழர்கள் அடையாளம் காணப்பட்டனர். இவர்களைக் கொலை செய்தால் முகாமிலுள்ளவர்களின் எதிர்ப்பை சம்பாதிக்க வேண்டிவரும் என்ற காரணத்தால் இவர்கள் வெறியேற அனுமதிக்கப்பட்டனர்.

தனிமனிதனாக வேனும் விடுதலைக்கு ஏதாவதொரு பங்களிப்பை செய்ய வேண்டுமென எண்ணி ரூபனும் ஏனைய தோழர்களும் திருசசியிலுள்ள ஓர் ஆச்சிரமத்தில் தங்களை அர்ப்பணித்து இந்தியக் கரையடைந்த தமிழ் ஈழ மக்களுக்காக தொணடாற்றினார்கள்.

அகதிகளுக்காக வந்த பொருட்களை எடுத்து வருவதற்காக, ஆச்சிரமத்திலருந்த இன்னொரு இளைஞருடன் வேதாரண்யம் சென்றார் ரூபன். வேதாரண்யத்திலுள்ள புலிகளின் வீட்டுக்கருகாமையால ரூபன் சென்ற பொழுது (முதல் நாளும் அதே வழியால் சென்ற பொழுது அவர்கள் அவரை ஒன்றும் செய்யவில்லை) 'பொட்டு' என்ற இயக்கத்துக் குண்டர் படை கொலைகாரனும் அவனது சகாக்களும் ரூபனை மறித்து இரும்புக் கம்பியால் மிருகத்தனமாக தாக்கி அவரை நினைவிழக்கச் செய்து தங்களது வானில் ஏற்றி கரையை நோக்கி கொண்டு சென்றார்கள். இதன் பின்னர் ரூபன் திரும்பவில்லை.

ரூபனுடன் வந்த மற்றைய தோழர் தொலைபேசி மூலம் ரூபனின் ஆச்சிரமத்திற்கு தகவல் தெரிவித்தார் தபால் நிலையத்திலிருந்து அவர் வெளியே வரும் பொழுது புலிகள் அவரையும் கைது செய்தனர் நான்கு மணி நேரத்தின் பின்னர் "பொட்டு" அங்கு வந்து ரூபனைத் திருச்சிக்கு அனுப்பிவிட்டதாக போகச் சொன்னார் அவர் திருச்சி சென்று ஆச்சிரமத்தில் பார்த்த போது ரூபன் அங்கு இல்லை. பின்னர் திருச்சியிலுள்ள புலிகளின் அலுவலகத்தில் சுவாமியாரும், அந்நண்பரும் புகார் செய்த போது, திவாகர் என்ற புலிகளின் திருச்சிக் கிளை பொறுப்பாளர் மிரட்டுகின்ற தொனியில் பேசி, இதனை வெளியே கூறினால் உங்கள் மேல் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் என்றார்கள்.

புலிகளே!கூறுங்கள் எங்கே ரூபன்?

# எழுச்சி

நடைமுறைச் சிக்கல்காரணமாகவும், பொருளாதாரநெருக்கடிகள் காரணமாகவும் கடந்த மாதங்களில் எழுச்சி வெளிவராமைக்கு மன்னிப்பு கேட்கிறோம்.

எழுச்சியை மாதாமாதம் வெளிக்கொணர்வது தங்களின் கரங்களிலேயே தங்கியுள்ளது.

ஒவ்வொரு இதழும் பல தடைகளை தாண்டி உங்களின் கரங்களை வந்தடைகிறது. ஆதலால் தயவு செய்து மற்றவர்களுக்கும் படிப்பதற்கு கொடுத்துதவும்.

எங்களது கரங்களை தொடர்ந்து வலுப்படுத்துங்கள்.

நிர்வாகி

பத்திரிகை குழு

தொடர்புகட்கு-
S. தயானந்தன்
35/3 வெல்கம் காலனி,
சென்னை-600 101
தெ இந்தியா.

www.tamilarangam.net

# ஜூலை நினைவுகள்

## 3-வது ஆண்டு 25,27,07-1986

சுதந்திரக் காற்றை சுவாசிக்கத் துடித்து நின்ற வீர மறவர்களின் உடல்களிலிருந்து உதிர ஊற்றுக்கள்

தமிழ் மக்களின் மீட்சிக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டு இன வெறியர்களோடு நிராயுதபாணிகளாக வெலிக்கடைச் சிறையில் போராடியவர்களின் இறுதி மூச்சுக்களிலிருந்து அவர்களின் இலட்சியத் தூறல்கள் அனைத்து நெஞ்சங்களிலும் வியாபித்துக் கொண்டது

நியாயங்கள் நிசப்தமான வேளை...
மனிதாபிமான உணர்வுகள் கூட மறுக்கப்படுகின்றன

விடுதலை விதைகளின் உயிர்ப்புக்கள் கல்லறைகளை நோக்கி வரலாறு படைக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றன.

விடியல் சுகத்தின் அரும்புகளுக்காக விலங்குகளை உடைக்கத்தான் முயன்றார்கள்


ஆனல்—

விடியும் வரை அவர்கள் காத்திருக்கவில்லை
அந்த விடியலுக்கே வீரமரணம் ஆனார்கள்

உதயத்தின் தோற்றுவாய்களாய் உயிர்களையே தியாகித்த அந்த வீரமறவர்களின் வீரசாகசங்கள் வியப்பானவை

அதிகார வர்க்கத்தின் அடக்கு முறைக் கொடுமைகளுக்கெதிராக ஆர்த்தெழுந்த ஆணிவேர்கள் அவர்கள் ஆட்சியாளர்களின் இனவெறித் தொடர்ச்சிகளினால் உண்டான உணர்ச்சிகள் தான் புரட்சி சக்திகளின் புறப்பாடுகள் அவ்வாறு தான்-




இனவெறி இரத்தக் கறைகளோடு தமிழ் ஈழத்தின் நிஜங்களைத் தழுவ நினைத்தவர்கள்

தமிழ் ஈழ தேசபிதா தங்கத்துரை. தளபதி குட்டிமணி முன்னணிப் போராளிகளான ஜெகன் தேவன் நடேசுதாசன் சிவபாதம் இவர்களோடு இன்னும் பல போராளிகள் கொடியவர்களின் இரத்த சுவைகளுக்காக மடிந்தவர்கள்

புதுயுகத்தின் அத்தியாயங்களை எழுதத் துடித்தவர்களின் இதயத் துடிப்புக்கள் வெலிக்கடைச் சிறையில் மௌனித்துவிடவில்லை தொடரும் விடுதலை வேட்கைகளின் விதைப்புகளுக்காக உரமாகிக் கொண்டது.

தமிழ் ஈழ விடுதலையின் ஆரம்பகர்த்தாக்களின் ஆரோக்கியமான ஆயுதப் போராட்ட முன்னெடுப்புகள் தான் இன்று ஆரம்பமாகி அனர்த்தங்களை அஸ்தமிக்க முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

இந்த சமாதானப் பிரியர்களின் முற்போக்கு ஊட்டல்கள் தான் சமதர்ம சகாப்தத்தை படைக்கப் போகின்றன.

இந்தப் புரட்சியாளர்களின் சிறைக் கொடுமைகள் சோகத் தழும்புகள் அவை தமிழீழத்தை நிட்சயப்படுத்தும் வரலாற்று நியதியின் அடையாளங்கள்,

அவர்களுடைய உடல்கள் சித்திரவதைகளினுல் ஒவ்வொரு நாளும் சிறிலங்கா கூலிப்படைகளினுல் நிர்மூலமாக்கப்பட்டன.

தமிழின மக்களின் இன்னல்களால் அவர்கள் உள்ளத்தில் விழுந்த கீறல்களுக்காக கிளர்ந்தெழுந்தவர்கள் வெலிக்கடைச் சிறையில் ஏற்பட்ட சித்திரவதை நிகழ்வுகளால் சோர்ந்துவிடவில்லை, நீதி மன்றத்தில் அவர்கள் நிறுத்தப்பட்டபோது தமிழ் ஈழ மக்களின் உரிமை மீட்சிக்கான நியாயங்களை வெளி உலகிற்கு.

தமிழ் ஈழ தேசபிதா தங்கத்துரை அவர்கள் தமிழ் ஈழத்து மக்கள் சார்பில் வரலாற்று சிறப்பு மிக்க விடுதலைப் பிரகடனத்தை வெளியிட்டார்.

அவைகள் வெறும் சொற்பிரயோகங்கள் அல்ல ஒரு பொற்காலத்தின் ஒழிப்பிழம்பு,

அந்த ஒளிர்வுகளின் தடயங்களிலிருந்துதான் இன்றைய விடுதலைப் போராட்டத் தளிர்களின் ஆழுமைகள் தொடர்கின்றன.

